982
KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலா நிலயம்.

V7, No.2, 11.1.1934.

SL
M211,N28KN
N34:2.2
199152

982

184

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 7.] 1934 ஞூ ஜனவரி மீ 11௳ [No. 2

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 17
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 19
3. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு
(ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 21
4. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 22
5. மதுரைக் கோவை
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 24
6. நம்மாழ்வார் வைபவம் (6-ம்பத்து-3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 25
7. உபநிடத முனிவன்
K. விஜயராகவாசாரியார் B.A. 27
8. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(வரதராஜ நிந்நு கோரி)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 28
9. கம்பராமாயணம்—(பம்பைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 29
10. வர்த்தமானம் 32

கலாநிலயம்

நட்பின் உதவி.

ஆன்மநினைவினை ஆதாரமாகக்கொண்டு வாழ்கின்ற வாழ்க்கையே வாழ்க்கையென்றும், அன்னதோர் ஆன்ம ஆதாரம் இல்லாவிடத்து மற்றவை இருப்பனவெல்லாம் தொலையாத துன்பத்திற்கே கொள்கொம்பாய் ஊன்றியவைகள் ஆகும் என்றும் சென்றவாரம் கூறினோம். கூறி, அவ் வான்மநினைவு நம் வாழ்வினைத் தழுவிக்கொள்ளும்படி மனத்தினைப் பண்செய்து மாண்புடையதாக்குவதற்குக் காவியக் கலைகளைப் பயில்வதுபோன்றதோர் நல்ல உபாயம் வேறுஒன்று யாம் கண்டதில்லை என்பதையும் சாற்றினோம். இக்கருத்துக்களின் உண்மையையும் பயனையும், இந்தியநாட்டு வித்தகர்களும் மேனாட்டு அறிஞர்களும் உலகின்பால் வைத்த அருளாலும் தம் நுண்ணறிவின் திறமையாலும், ஆராய்ந்து செவ்விதின் விளக்கியிருக்கின்ற உயரியவாசகங்களை எமக்கு உதவியாகக்கொண்டு சென்ற ஆறு வருடங்களில் இக் கலாநிலயத்தின்கண் பற்பல வகைகளில் எடுத்தெடுத்துக் காட்டியிருக்கின்றோம். இவ்வுத்தமர்தம் உரைகளுக்கு இணங்கி ஒழுகுவதன்றி மனிதருக்குமெய்யாய துணை வேறு ஒன்றும் இல்லை. இதனை வறிதே விட்டு, அரசியல் வாதங்களாலும், பொருளாதார முயற்சிகளாலும், சனசமூகச் சீர்திருத்தங்களாலும், மற்றும், இவை போன்ற வேறு எவ்வகை முன்னேற்ற முறைப்பாடுகளாலும் பயன் யாதும் இல்லை, இருக்கவும் இயலாது, என்பதனையும் அவ் வுத்தம வித்தகர்தம் உரைகளே கொண்டு யாம் காட்டாமல் விட்டதும்இல்லை. அவைகளால் நற்பயன் விளைவதில்லை என்பதற்கு மேற்கோள்கள் அவசியமே இல்லை. தீமையே பெருகுவதை நாள்தோறும் கண்டுவருகின்றோமே; கைப்புண்ணிற்குக் கண்ணாடி வேண்டா. ஆகையால், அவைகளால் நன்மைக்கு மாறாகத் தீமைதான் விளைய இயலும் என்பதை உணர்வதற்குத்தான் ஆழ்ந்த அறிவுடைய மேலோர்தம் உதவிவேண்டும். அதனை எய்தும்படி செய்திருக்கின்றது இக்கலாநிலயம். தீமையால் வருவது துயரம். தீவினைகள் இன்று, அளவிறந்து செய்யப்படுகின்றன வேனும், உண்மையை உற்று நோக்குங்கால் அத்தீவினைகளை நயந்து செய்பவர் மிகமிகச் சிலர் என்னும் இரகசியம் அறிவாளிகளுக்குப் புலப்படாமற் போகாது. தீவினைசெய்வார் நயந்து செய்வாரலர்—பயந்தே செய்கின்றனர். வறுமையால்பீடிக்கப்படுபவன், அதனால்விளையுந் துன்பங்களுக்குப் பயந்து, சில தீவினைகளைச் செய்து அத்துன்பங்களினின்று தப்பவேமுயல்கின்றான். செல்வமுடையோரும், தம்மினும் செல்வம் உடையாரை நோக்கி, அன்னவரினும் தம்மைப் பிறர் குறையமதிப்பரேஎன அஞ்சித் தம்முடைய செல்வத்தைப் பெருக்கும் வண்ணம் சிற்சில தீவினைகளைச் செய்கின்றனர். இளைத்தான் இவன் என்று பிறர் ஏசுவார் என்னும் ஒரு பயத்தினால்தான் ஒரு கன்னத்தி லடிபட்டவன் மறுகன்னத்தையுங் காட்டாமல் அடித்தவனை எதிரடித்து ஒறுப்பவனாகின்றான். இப்படியே, தீவினைகள் செய்வதுடன் நல்லன செய்யாமைக்கும் பெரும்பாலும் பயமே காரணமாகி அமைவதை எங்குங் காணலாம். இத்தகைய பயத்தினின்று விடுதலையடைவதே உண்மையான விடுதலை என்பதாம்; மற்ற விடுதலைப் பேச்செல்லாம் படுகொலைக்குப் பேதையர் இட்டழைக்கும் பொய்ப் பெயர். இதனை உணர்வதற்கும் உதவிசெய்திருக்கின்றது இக் கலாநிலயம்.

இவையிவை இக்கலாநிலயத்தின் கருத்துக்களாம். இக்கருத்துக்கள் பரவி வளர்வதுமன்றி மனிதர்தம் உணர்வின்கண் ஊன்றி உலகத்தின் ஒழுக்கமாகவிளைவதற்குரிய கருமத்தையும் மேற்கொண்டிருக்கின்றது. இங்குரைத்தவைகளை யாவரும் தம் அறிவினால் எளிதில் தெரிந்துகொள்ளலாம். எனினும், அறிவின் அளவோடு நின்றுவிடுவதால் யாருக்கும் எள்ளளவேனும் பயனில்லை. இவ்வறிவுதான் நம் உணர்வினை உறவுறத் தூண்டி வாழ்க்கையைப் பொலிவுசெய்யும் விழுமிய விளக்காக அமைதல்வேண்டும். உணர்வையும் அறிவையும் ஒற்றுமை செய்தமைக்கும் புண்ணியம் கலைகளுக்கே உளதாதலின், அக் கலைகளின் பயிற்சியை நல்குதற்கு நனிமுயன்றுவருகின்றது இக்கலாநிலயம்.

இன்னவாறு கலாநிலயம் உணர்த்த முயல்கின்ற கருத்து அரிது ஆதலின் அக்கருத்துக் கைவரும்படி மேற்கொண்டிருக்கின்ற கருமமும் பெரிதாதல் வேண்டும். அத்துணைப் பெரிய கருமம் ஒரு பத்திரிகையை நடத்துவதால் மட்டுமே நிறைவேறிவிடும் என்று நாம் எண்ணவில்லை. கலைகளின் நிலயமாகிய காவியங்களின் பயிற்சியும் சுவையும் விரைவில் பரவிப்பெருகுவதற்குரிய ஏனைய முயற்சிகளையும் கைக்கொண்டிருக்கின்றோம். இதன்படி, சென்னையிலும் காஞ்சீபுரத்திலும் செட்டிநாட்டிலும் கல்விக்கழகங்கள் நிறுவி, ஆங்காங்குள்ளவர் ஒழிந்தநேரங்களில் தம் கருத்தைத் தமிழ் இலக்கியங்களின்பால் இன்பமும் பயனும் ஒருங்கே எய்துமாறு செலுத்துவதற்கு இயன்றபடி பாடங்கள் கற்பித்துவருகின்ற முறைமையை எமது நண்பர்கள் நன்கு அறிவார். பற்பல உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவரும் பற்பல வர்த்தகங்களில் ஈடுபட்டிருப்பவர்களுமாக இப்பொழுது இக்கழகங்களில் அறுநூறு பேர்களுக்குமேல் அமிழ்தனையதீந்தமிழின் இன்சுவையை மனமுற விரும்பிப் பயின்றுவருகின்றனர். இக் கழகங்கள் நிறுவி ஒருவருடத்திற்கு மேல் ஆகவில்லை. எனினும் எமது முறைப்படி தமிழினைப் பயின்றுவருபவர், இச்சிறு காலஅளவிலே, தமிழ்மொழியிலுள்ள பழைய இலக்கியங்களின் அருமையைத் தாமே ஓதி உணர்ந்துகொள்ளுந் திறமையை எய்துதற்குத் தம்மால் ஒருநாளும் இயலாதென இதன்முன் அஞ்சியிருந்த அவ்வெண்ணத்தினின்று தெளிந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. யாம் எதுசெய்யினும் செய்யாவிடினும், பழந்தமிழ்க் காவியங்கள் என்ற ஒருபெயரைக் கேட்டவுடனே, மனிதர் பொதுவாகத் தாம் அதனைக் கற்க இயலாதென்று கொண்டிருந்த பயமெல்லாம் வீணான பயமே என்பதனை ஒருவாறு காட்டினோம் என எண்ணத் துணிகின்றோம். இக்கழகங்களில்முதிர்கின்றவர் தாமும் இவ்வண்ணமே தம்முடைய முயற்சியால், தம்மைச் சூழ்ந்திருக்கும் ஏனையோரிடத்தினின்று இப்பயம் நீங்கும்படி நாம் செய்தவாறே செய்ய மனங் கொள்வாராயின் எண்ணரிய வேகமுடன் கலாநிலயத்தின் கருமம் பரவுவதுடன் அது வற்புறுத்துங் கருத்தும் நிறைவேறி வருகின்ற நலமுடையதாகும் என்ன விளம்பவும் வேண்டுமோ.

இனி, இக்கலாநிலயத்தின் கருத்திலும் அக்கருத்தினை நிறுவுவதற்கு இது கைக்கொண்டிருக்குங் கருமத்திலும் அக்கருமத்தை இது நிகழ்த்தும் முறையிலும் நம்பிக்கையுடைய நண்பர்கள், தாமும் இன்னவகை முயல விரும்புவாராயின் அன்னவர்க்கு உதவியாம்படி சில இங்[illegible]கின்றோம்:-

(1) இந்தக் கலாநிலயத்தைத் தொடர்ச்சியாகவும், இயலுமாயின் முதலிலிருந்தும், ஊன்றிய கருத்துடன் ஓதிவரவேண்டியது இன்றியமையாததென்பதை உரைப்பது மிகையாயினும், இதனைச் சார்ந்த மற்று ஓர் விடயத்தைச் சிறிது விளக்குவது அவசியமாகின்றதென நினைக்கின்றோம். இப்பத்திரிகைக்கு இப்பொழுது புதிதாகச் சந்தா சேர்ந்திருக்கின்ற நண்பர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் இது. இப்பத்திரிகையில் வரும் தலைப்பங்கங்களேனும் ஏனையகட்டுரைகளேனும் கடினமான நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன என்று எண்ணி, அவை தமக்கு விளங்குவதற்குவேண்டிய தமிழ்ப்பயிற்சி யில்லாமையால் தம்மால் இக்கட்டுரைகளைப் படித்தற்கு இயலாதென்று ஒருவரும் தயைசெய்து இப்பத்திரிகையைக் கையில் எடுத்தவுடன் மனஞ்சோர்ந்துவிட வேண்டா. "கொச்சை" யான தமிழ்கலவாமல் காக்கமுயல்கின்றோம், உண்மையே. ஆயினும், பொருள் விளங்குவதற்குத் தடையாயிருப்பது நடையின் கடினம்அன்று என்பதைச் சற்றே உணர்ந்துகொள்ளவேண்டும். கட்டுரையில் அடங்கிய கருத்துக்கள் பெரும்பாலும் புதியன. அவைதாம்புதியமுறையில் உரைக்கப்பெறுகின்றன. ஆதலால் மேலெழுந்த பார்வையுடன் படிக்காமல் சிறிது ஆழ்ந்து கருதிக் கருத்துள் கொள்ளத்தக்கவை. இன்னவாறு சில இதழ்களைச் சிறிது சிந்தனைசெலுத்திப் படித்துவிட்டால் பின்னர் இக்கருத்துக்களிலும் முறைகளிலும் பழக்கம் ஏற்பட்டுச் சிறிதேனும் கஷ்டமின்றி யாவரும் இக் கலாநிலயத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடியவர்கள் ஆவார். எத்தனையோபலர் அனுபவமும் இதுவேயாகி இருந்திருக்கின்றது.

(2) முன்னரே தமிழிற் பயிற்சியுடையோரும், நம் கலாநிலயக் கழகங்களின் மூலமாகப் பயிற்சி பெற்றவரும், முன்னுரைத்தபடி, தம்மாலியன்றஅளவு ஏனையோர்க்கும் தமிழ்மொழிப் பயிற்சியும் காவியச்சுவையும் கைவருவதற்கு வேண்டிய உதவியைப் புரிய மனங்கொண்டுமுயலவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் தங்கள் வீட்டிற்கு அருகில், உத்தியோகங்கள் செய்யும் இடங்களில், ஊர்களில், ஒருசிலரைச் சேர்த்துக்கொண்டு, நாம் கலாநிலயக் கல்விக்கழகங்களில்போதிக்கும்முறையை அநுசரித்துத்தமிழறிவை மிக எளிதில் பரவச்செய்யலாமே. அதற்கு, நம் கலாநிலயத்தில் வரைந்து வருகின்ற தமிழ்ப்பாடங்களில் எடுக்கப்பெற்றிருக்கின்ற நூல்களும், அவைகளைப் போதிக்கின்ற முறையும் செவ்விதின் அமைந்திருக்கின்றன என்பது நெடுங்காலமாய் நாம் அவைகளைக் கையாண்டிருக்கின்ற அனுபவத்தால் தெரியவருகின்றது. இதனால், இலக்கியத்துடன் இலக்கணமும் வருத்தமின்றிக் கற்கப்பெறும். எனினும், போதிக்கின்றவர் தம்முடைய விருப்பத்திற்கும், கற்போர் திறமைக்கும் ஏற்றபடி, இப்பாடங்களின் முறைகளினின்று மாறப்படாதென்று யாம் உரைக்கவில்லை.

(3) இவ்வாறு செய்ய விரும்புகின்றவர், சென்னையிலேனும், வெளியூர்களிலேனும் இத்தகைய கழகங்களைத் துவக்குவதற்கு எம்முடைய உதவி வேண்டுவார்களாயின் எம்மால் இயன்றவகையில் அதனைச் செய்ய ஆயத்தமாயிருக்கின்றோம். இதுபற்றிமேலும் ஏதேனும் அறிய விரும்புபவர் நேரிலேனும் கடிதம் மூலமாகவேனும் தெரிந்துகொள்ளலாம். இந்தப்படி

192152

முயற்சி செய்தற்குப் பெரிய பட்டினங்கள்தாம் இடமாகவேண்டும் என்ற அவசியமில்லை. மிகச் சிறிய ஊர்களிலும் செய்யலாம். எத்தனைபேர் படிக்க உடன்பட்டு வருவார் என்பதும் பொருளில்லை. செய்யத்தக்கது இது வென்று துணிந்து அதனைச் செய்யத் துவக்கிவிட்டால் பிறகு, ஒருவர் படித்தாலும், நூறுபேர் படித்தாலும் ஒன்றே. கற்பிப்பதற்கு ஆயத்தமாயிருப்பது நம் கடமையே யன்றி, கற்பதற்கு ஒரு சிலரே சேர்ந்தார் என்றால் அது நம்முடைய பிழையுமன்று, குறையும் அன்று. முதலிற் சேர்வார் தொகை குறைவாக இருந்தாலும், மெல்லமெல்ல வளரும் என்பதினும் ஐயமில்லை. இன்னதே எம் அனுபவம்.

(4) நம் கலாநிலயப் பத்திரிகை விரைவிற் பரவவேண்டுமென்ற விருப்பமுடையோர், தங்கள் ஊர்களில் சந்தா நண்பர்கள் சேர்த்து உதவமுயன்றதில், வருட சந்தாவை ஒருங்கே செலுத்தமாட்டாமையால் பலர் இப்பத்திரிகையை வாங்குவதற்கு இயலாதவர்களாய் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். எம் கழகங்கள் நடைபெறுகின்ற சென்னை நகரிலும் காஞ்சீபுரத்திலும், மாதமாதம் 10 அணா வீதம் சந்தாவைச் செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றோம். இதனால் நம் பத்திரிகையைப் பலர் வாங்கக் கூடியவர்களாயினர். தக்க வசதிகள் வாய்க்குமாயின் இந்த மாதவீதச் சந்தா முறையை ஏனைய ஊர்களிலும் நிறுவுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றோம். ஆங்காங்குள்ள எமது நண்பர்கள், இவ்வண்ணம் மாதச் சந்தாவிற்கு வாங்கக்கூடியவர்களைத் தம்மால் இயன்றவரையில் சேர்த்து அவர் விலாசங்களை எமக்கு எழுதினால், நாங்கள் இங்கிருந்து பத்திரிகையை நேராக அவரவர் விலாசங்களுக்குத் தனித்தனி தபாலில் அனுப்புவோம். அன்னவர் தம் சந்தாவை மாதமாதம் அந்நண்பரிடம் செலுத்த அவர் ஒருங்குசேர்த்து எமக்கு அத்தொகையை மாதமாதம் அனுப்பித்தரலாம். இது வர்த்தகமுறையில் ஊதியங் கருதிச் செய்யப்படுவது அன்று என்பதை யாம் உரைக்கவேண்டா. கலாநிலயத்தின்பால் உள்ள அன்பும் அதனால் பிறர் பெறக்கூடிய பயனும் நினைவாகச் செய்வதற்குரிய உதவியே இது.

ஒல்லும் வகையெல்லாம் கலாநிலயமும் அதன் கருமமும் எங்கும் பரந்து பெருகும்படி, ஆங்காங்குள்ள எமது நண்பர்கள் உதவுவார்களென்ன, இறைவனது அருளை முன்னிட்டு நம்பியிருக்கின்றோம்.

தமிழ்ப்பாடம் 102.

வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[5-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கரும்

சந்தனுவுக்கும் கங்கைக்கும் பிறந்த பீஷ்மனுக்கும், சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் பிறந்த விசித்திரவீரியனுக்கும், சத்தியவதிக்கும் பராசரருக்கும் பிறந்த வேதவியாசருக்கும் உள்ள உறவு அண்ணன் தம்பிமுறையி லடங்குமாயினும், பீஷ்மனுக்கும் விசித்திரவீரியனுக்கும் தந்தை ஒருவர் தாய் வேறு வேறு; விசித்திரவீரியனுக்கும் வேதவியாசருக்கும் அன்னை ஒருத்தி, தந்தை வேறு வேறு; பீஷ்மனுக்கும் வேதவியாசருக்கும் தந்தையும் வேறு, தாயும் வேறு.

விசித்திரவீரியன் மகவின்றி யிறந்ததால் சந்திரகுல மரபு தொடர்பற்று மறையும்நிலையில் இருந்ததுகண்டு சத்தியவதி தன்மருகியர் அம்பிகை அம்பாலிகை என்னும் அவ்விருவரோடும் மிகவும் துன்பம் உற்றனள். அக்காலத்தில், சாத்திரப்படி நியோகம் என்னுமோர் விதி யிருந்தது. புத்திரனில்லாமல் ஒருவன் இறப்பானாயின், அவனது சந்ததி அற்றுப்போகா வண்ணம், அவனது மனைவி தன் தேவரனுடன் கூடி (தேவரன்-கணவனுடன் பிறந்தவன்) ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது அந்த நியோகம் என்னும் விதியின் கொள்கையாம். இந்த நியோக விதிதான் இப்பொழுது புத்திரனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்கின்றபழக்கமாகமாறி வழங்குகின்றது. இதன்படி, "நின் கொழுந்தியருக்குப் புத்திரர் அருளுவாய்" என்னச் சத்தியவதி பீஷ்மனை வேண்ட, அவன் இதனால் தான்கொண்ட விரதம் வழுவுமென்று மறுத்து, வேதவியாசரைக்கொண்டு இக்கருமத்தை முடித்துக்கொள்ளலாம் என்று நினைப்பூட்டினான். சத்தியவதி வேண்டிக்கொண்டபடியே வேதவியாசரும்வந்து அம்பிகையுடன் கூடினர். அவளோ, தவத்தால் இளைத்துக்கிடந்த உடலும் பின்னிச்சுருண்ட சடையையும் உடைய அம்முனிவரன் நெருங்கியபோது அவனைக் காணவுங்கூசித் தன் கண்களைத் திறக்காமலே இருந்துவிட்டாள். ஆகையால் அவள் வயிற்றில் திருதராட்டிரன் குருடனாய்ப் பிறக்கலானான். எனவே சத்தியவதி வேண்டியபடி வியாசர் அம்பாலிகையுடன்கூட, அவள் இம்முனிவனைக்கண்டு அஞ்சி மெய்யெல்லாம் விளர்த்தாளாதலால், அவளுக்குப் பிறந்த பிள்ளையும்பாண்டு ஆயிற்று. இருபிள்ளைகளும் இவ்வாறு ஊனமடையவே, சத்தியவதி, அம்பிகையை மறுபடியும் வியாசருடன் கூடி நல்லதோர் புத்திரனைப் பெற்றுக்கொள்ளக் கட்டளையிட்டாள். அம்பிகையோ முனிவனை அணைய மனமிசையாது, தன் தாசி ஒருத்திக்குத் தன்போன்ற வேடம்புனைந்து வியாசரிடம் அனுப்பினாள். அத்தாசியோ, இத்தகையவோர் மாமுனிவரனது சேர்க்கையைப் பெறும் தன் பாக்கியத்தை மிக மகிழ்ந்து மனமொவ்விக் கூடினாளாதலின், தருமமும் ஆற்றலும் மிகுந்த உத்தமனான விதுரன் அவள்வயின் பிறந்தான். பிறவி இவ்வாறெலாம் வேறுபட்டாலும் திருதராட்டிரன் பாண்டு விதுரன் ஆகிய இம்மூவரும் சகோதரரென்னும் முறையுடையவர். பீஷ்மன் இவர்களுக்குப் பெரிய தந்தை.

இம் மூவருக்கும் தக்கவயது வந்தபின், திருதராட்டிரனை அரசனாக்கிப் பாண்டுவைச் சேனாபதியாகவும் விதுரனை மந்திரியாகவும் அமைத்தனன் பீஷ்மன். காந்தாரதேசத்தரசனது மகள்காந்தாரியைத் திருதராட்டிரன் மணந்து, துரியோதனன் துச்சாதனன் முதலிய நூறு பிள்ளைகளையும், துச்சளையென்னும் ஒரு பெண்ணையும் பெற்றான். பாண்டுவின் மனைவியர்கள், குந்தி மைத்திரி என்பவர் இருவர்.

பாண்டுவின் மூத்தமனைவி குந்திபோஜநாட்டு அரசனுடைய புத்திரியாதலால் அவளுக்குக் குந்தி என்ற பெயர் வந்தது. இவளது இயற்பெயர் பிரதை. இவளது இளமைநாளில் தந்தையின் கட்டளைப்படி, மிகவுங் கோபமுடைய துருவாசமுனிவனை ஒருவருடகாலம் அவன்மனம் சிறிதுங் கோணாமல் வழிபட்டனள். அதனால் மிக மகிழ்ந்த அம்முனிவன், "பெண்ணே, நீ தேவரில் யாரைக் கருதி வர அழைத்தாலும் அவரவர் அக்கணத்தில் வந்து உன்னோடு சேர்வார்" எனவொரு மந்திரம் அவளுக்குக் கற்பித்துவிட்டுப் போயினான். போயபின், கன்னிப்பருவத்திருந்த பிரதையென்பாள், இம்மந்திரத்தைச் சோதிக்கவேண்டுமென்ற பிள்ளைமதியால் உச்சரிக்கச் சூரியன் வந்து இவளோடு புணர நேர்ந்தது. கர்ணனைப் பெற்றாளாயினும் மீண்டுங் கன்னியே ஆயினாள். கவச குண்டலங்களுடன் பிறந்த மகவை ஒருவரும் அறியாமல் ஒரு பெட்டியில் வைத்துக் கங்கைநதியில் போக்கினள். தேர்ப்பாகனொருவன் இப்பெட்டியைக் கண்டெடுத்து அதனுள்ளிருந்த கர்ணனை வளர்த்துவரத் துரியோதனன், அர்ச்சுனனைப் போர் வெல்லத்தகுந்த ஆற்றலுடையவன் இவனேயென்று அவனிடம் மிகுந்த நட்புக்கொண்டு, அவனை அங்கதேசத்திற்கு அரசனும் ஆக்கினான். இஃதிவ்வாறாக,

பாண்டு, குந்தியை மணந்து வாழும்நாளில் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபோது அங்கு, மான் உரு எடுத்துத்திரிந்திருந்த முனிபத்தினி ஒருத்தியை மானே என எண்ணிக் கொன்றுவிட, அம்முனிவர், "நீ இனி உன்மனைவியுடன்சேர்ந்தால் அப்பொழுதே இறப்பாயாக" எனச் சாபம் இட்டுவிட்டார். ஆதலின் பாண்டுவிற்கு மக்கள் பிறப்பது இயலாததாயிற்று. எனவே, துருவாசமுனிவன் கற்பித்த மந்திரத்தால் தேவர்களின் சேர்க்கையாலாவது புத்திரர் பெற்றளிக்கப் பாண்டு குந்தியை வேண்டினான். அவ்வாறே அவள், யமனோடு கூடி உதிட்டிரனையும், வாயுவோடு கூடிப் பீமனையும், இந்திரனோடு கூடி அருச்சுனனையும் பெறலானாள். பிறகு, தன் சக்களத்தியாகிய மைத்திருக்கு இம்மந்திரத்தைச் சொல்லித்தர, மைத்திரியும் அசுவனிதேவரிவரோடும் கூடி நகுல சகாதேவர்களை இரட்டைப் பிள்ளைகளாய்ப் பெற்றுக்கொண்டனள். சிறிதுகாலஞ் சென்றபின்னர் வசந்தகாலத்தில் காமவெறி மிகக்கொண்ட பாண்டு தான் பெற்ற சாபத்தையும் மதியாது மைத்திரியைச் சேர்ந்ததால் உயிர்துறந்தான். பாண்டவர் துரியோதனாதியர் அனைவரிலும்மூத்தவன் உதிட்டிரன், அவனுக்கு வயதில்அடுத்தவன் துரியோதனன். வீமசேனன் முதலியோர் துரியோதனனுக்கு இளையவர்.

இந்நூற்றைவருக்கும் பீஷ்மன், கிருபாசாரியனைக் கொண்டு வில்வித்தை பயிற்றுவித்துத் தக்க வயதில் மூத்தவனாகிய தருமனுக்கு இளவரசுப் பட்டங் கட்டவே, துரியோதனாதியர் பொறாமைகொண்டு அரக்கு மாளிகை முதலிய சூழ்ச்சிகளாற் பாண்டவர்களைக் கொல்லமுயன்றதொன்றும் பயன்படாமற்போயது.

பாண்டவ துரியோதனாதியர்களுக்குக் கிருபாசாரியன் தன்னாலியன்றவளவு படைக்கலப்பயிற்சி செய்வித்தபிறகு தன்னினுஞ் சிறந்த வில்லாசிரியனும், தனது மைத்துனனும் ஆன துரோணனை அத்தினாபுரிக்கு வரவழைத்துப் பீஷ்மனது உத்தரவின்படி அரசிளங்குமாரர்களுக்கு ஆசிரியனாக்கினான். துரோணன் இவ்வாறு இங்கு வில்வித்தை கற்பிக்க வந்ததன் நோக்கம் ஒன்றுளது. இதனை உணர இவனது வரலாற்றைச் சிறிது கூறவேண்டும்.

பரசாரமுனிவர் செய்திருந்த தவத்தைச் சிதைக்கும்பொருட்டுத் தேவர்கள் ஏவிய மேனகையைக் கண்டதால் நெகிழ்ந்த வீரியத்தை அவர் ஓர் கும்பத்தில்விட அதனின்று பிறந்ததால் இவருக்குத் துரோணர் என்ற பெயர் வந்தது. இவரும் பாஞ்சாலதேசத்தரசன் யாகசேனனும் இளமையில் ஓராசிரியரிடத்தில் வில்வித்தை கற்றிருந்தபோது இவ்விருவருக்கும் மிகுந்த நட்புண்டாக, அத்துருபதன், தன் தந்தைக்குப் பின்தான் அரசனாகுங் காலத்தில் தன் அரசிற் பாதி துரோணனுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். துருபதனும் அரசனானான். துரோணன் அரசொன்றும் வேண்டிலன்; கிருபாசாரியனது தங்கை கிருபை என்பாளை மணந்து வனத்திலேயே வறியனாயிருந்தான். இவனுக்கு அசுவத்தாமன் என்ற மகவு பிறந்தது. அதற்குப் பசுவின்பால் கொடுக்கவும் வழியின்றி வறுமையால்வருந்தியகாலத்தில், முன் துருபதன் அளித்திருந்த வாக்கை நினைத்து, அவனிடம் ஒரு பாற்பசுபெற்று வரலாம் என்று சென்றனன். அவ்வரசனோ நாட்டிற் பாதிதான் இவன் கேட்க வந்துவிட்டனன்என அஞ்சி முகங்கொடாது நிந்தனைகளும் புரியவே, துரோணன், "உன்னோடு போர்புரிந்து உன்தேசத்திற்பாதி கொள்வதுமல்லாமல், உன்னையுந் தேர்க்காலில் கட்டுகின்றேன்பார்" என்று வஞ்சினங்கூறி யகன்றனன். அகன்று சிலகாலஞ் சென்றபின், பாண்டவர்களது திறமையைக் கேள்வியுற்று அவர்களைக்கொண்டு தன் கருமத்தை முடித்துக்கொள்ளலாம் எனக் கருதினனாய் அத்தினபுரி வந்து பீஷ்மனிடம் தன் நினைவைச் சொல்ல அவனும் உடன்பட்டான். தன் மாணவர் யாவரினும் அர்ச்சுனனே வில்வித்தையில் சிறந்து விளங்கினமையால், "நீ எனக்குக் குருதக்ஷணையாகத் துருபதவேந்தன் யாகசேனனைக் கொணர்ந்து கொடு" என்று துரோணன் கேட்க, அருச்சுனனும் போர்கொண்டெழுந்து பாஞ்சாலமன்னனை வென்று தேர்க்காலில் கட்டிக்கொணர்ந்து நிறுத்தினான். எனினும் தன்னை நிந்தித்த பழியொன்றையே தீர்க்கின்ற நோக்கமுடையவனாதலால் துரோணன் அது முடிந்ததென்று மகிழ்ந்து யாகசேனனுக்கு உயிர்ப்பிச்சையும் அவன் நாட்டையும் மீண்டும் அளித்துப் போக்கினான். துருபதனோ, தன்னை இந்நிலைகண்ட துரோணன்பால் தீராச் செற்றங்கொண்டனன்; தன்னை வென்று தொலைத்த அர்ச்சுனனுடைய வீரத்தை வியந்தனன். துரோணனைக் கொல்லத் தனக்கு ஒருபிள்ளையும், அர்ச்சுனனை மணக்கத் தனக்கொரு பெண்ணும் வேண்டும் என்ன அவன் பெருந் தவங்கள் செய்யவும், வேள்வித்தீயிலிருந்து திட்டத்துய்மனும் திரௌபதியும் பிறந்தனர்.

இலக்கணம்

நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெய்யும் வருங்கால் அவை எவ்வாறு புணரும் என்பதை இனிக் கற்போம். நிலைமொழி, அ இ உ என்னும் சுட்டு இடைச்சொல்லாகவேனும், எ, என்னும் வினா இடைச்சொல்லாகவேனும், ஆ (பசு), ஈ (கொடு, அல்லது ஈ என்னும் செந்து) ஐ (அழகு, கோழை) என்பனபோல் பொருள்தருகின்ற ஓரெழுத்தொருமொழியாகவேனும் அமைந்தாலன்றி அ, ஆ, இ, ஈ, ஐ போன்ற உயிரெழுத்து உயிரெழுத்தாகவே நிலைமொழியிறுதியில் இருக்க இயலாது. கரடி, எருமை, கரா, புன்னை என்பனபோல் அவை மெய்யின்மேல் ஏறியே நிற்கும். ஆயினும் ஈற்றில் ஒலிக்கின்ற ஒலி உயிரொலி ஆதலால் இவைகளை உயிரீற்றுச்சொல் என்போம். அவ்வாறே, க், த், ப், ம், என்பனபோன்ற மெய்யெழுத்துப் பதினெட்டில் ஒன்றுகூட மெய்யெழுத்தாகவே மொழிக்கு முதலில் வராது. காடு, தேசம், படம், மிளகு, என்பனபோல் உயிரோடு கூடியே முதலில் வரும். எனினும் முதலில் ஒலிப்பது மெய்யினது ஒலியாகையால் இவைகளை மெய்முதல் பதம்என்போம். இவ்விடயம், இதன்முன்னர்ப் பல விடங்களில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது.)

நிலைமொழியிறுதியில் உயிரும், வருமொழி முதலில் மெய்யும் நின்று புணர்கின்ற விதிகளை நான்கு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம் :—

A. நிலைமொழி அ இ உ, என்னும் சுட்டு இடைச்சொற்களில் ஒன்றாகவேனும், எ என்னும் வினா இடைச்சொல்லாகவேனுமிருக்க, வருமொழி முதலில் மெய் வருதல்.

B. நிலைமொழி யிறுதி குற்றியலுகரமாகவேனும் முற்றியலுகரமாகவேனும் இருக்க, வருமொழி முதலில் யகரமெய் வருதல்

C நிலைமொழியிறுதிஎவ்வுயிராகவேனும் இருக்க, வருமொழிமுதலில் மெல்லின மெய்யேனும் இடையின மெய்யேனும் வருதல்.

D. நிலைமொழியிறுதி எவ்வுயிராகவேனும்இருக்க வருமொழிமுதலில் வல்லினமெய் வருதல்.

[குறிப்பு:—நிலைமொழி ஈறு இவ்வாறாக, வருமொழி முதலில் உயிர் வரின், என்னும் என்பதை இதுவரையில் உரைத்து முடித்துவிட்டோம்.]

இனி, இப்பிரிவுகளை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம். இவைகளில் முதல் மூன்று பிரிவுகளில் கற்பதற்கு அதிகம் இல்லை. நான்காவது பிரிவே மிகவும் முக்கியமானது. அவ்விதிகளைக் கற்கும்போது, காய், தேர், தமிழ், என்பன போல், ய், ர், ழ், என்னும் மெய்யெழுத்துக்களில் முடிகின்ற நிலைமொழிகளையும் அதனில் சேர்த்துக்கொள்வோம். ஏனெனில், உயிரீற்றுச் சொற்கள் மெய்ம்முதல் சொற்களோடு புணர்வதற்குரிய விதிகள், இந்த ய் ர் ழ் என்னும்மெய்யீற்றிற்கும் பெரும்பாலும் பொருந்துவனவா யிருக்கின்றன.

ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[9-வது பக்கத் தொடர்ச்சி]

I. ஜான் அரசர்

இச் சரித்திரத்தை யடிப்படையாகக் கொண்டுள்ள ஷேக்ஸ்ப்பியர் நாடகக்கதையைச் சற்றேஇனி நோக்குவோம். அரசன் தனக்குரித்தான பிரெஞ்சு நாடுகளைப் போர் ஒன்றுஞ் செய்யாமல் இழந்துவிட்டான் என்றுசொல்வதற்குத் தேசாபிமானமுள்ள ஷேக்ஸ்ப்பியருக்கு மனமெழவில்லை.ஆகையால்கதையின் துவக்கத்தில் ஜானும் அவனது ஆங்கிலப் படையும் பிரெஞ்சுநாட்டிற்குச்சென்று, அங்கே ஆங்கியர்ஸ்என்னும் ஊரை, ஆர்தர் சார்பாக முற்றுகை செய்துகொண்டிருந்த பிரெஞ்சுப் படையோடு கைகலந்ததாக ஷேக்ஸ்ப்பியர் நாடகம் ஆரம்பம் ஆகின்றது. இரண்டு படைகளுக்கும் வெற்றி தோல்வி ஏற்படவில்லை. ஆதலால் இருதிறத்தாரும் ஆங்கியர்ஸ் ஊருக்குள் செல்ல முயன்றார்கள். நுண்ணிய அறிவுடைய அவ்வூரார் இருவருக்கும் இடந்தராமல், 'உங்களில் வெற்றி பெற்றவருக்கே நாங்கள் கதவைத் திறப்போம்' என்றனர். அவ் வேளையில் ஒருவனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. அவன், அரசரிருவரும் ஒன்றுசேர்ந்து அவ்வூரை முதலில் நிர்மூலமாக்கிப் பின்னர் அவர்கள் தம்முள் போர்புரிய வேண்டுமெனத் தூண்டினான். இது அனைவருக்கும் சம்மதமாகி அவ்வாறே செய்தனர் ஊரும் அறவே ஒழிந்துவிடும்போலிருந்தது. இதைக் கண்ட அவ்வூரானொருவன் அரசர்களைநோக்கி, 'எங்களூரில் நுழைய எளிய வழியொன்றிருக்க, அதை விடுத்துக் கொலைபாதகத்துக்கு ஆளாவாருண்டோ? இதோ நிற்கும் ஜான் அரசருடைய உடன்பிறந்தாள் மகளை, பிலிப் அரசருடைய பிள்ளைக்குத் திருமணம் முடித்தால்,உங்கள் விவாதம் முடிந்துவிடும்" என்றான். சண்டையை யொழிக்க வழியொன்று கிடைத்ததென மனமகிழ்ந்த மன்னரும் இதற்கு உடன்பட, மணமும் நடந்தேறியது. ஆர்தரின் தாயாகிய கான்ஸ்டன்ஸுக்கு இது தன்மகனை ஏமாற்றச்செய்த சூழ்ச்சியெனத் தோன்றிற்று அவள் பிலிப்பையும் அவனுக்குத் துணையாய்வந்த ஆஸ்ட்டிரியா அரசனையும் வைது சபித்தாள். இச்சமயத்தில், போப் அனுப்பிய தூதன் ஒருவன் அவ்விடம் வந்து இங்கிலாந்தில் காண்டர்பெரி என்னும் ஊருக்குப் போப்பினால் அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தன் ஒருவனை ஜான் தள்ளிவிட்டதாகவும், அதனால்போப்பின் சினத்துக்கவன் உரியவன் ஆனான்என்றும், ஜான் தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டு அடங்கி நடவாவிடில் பிலிப்பும் ஆஸ்டிரியா அரசனும் அவனை எதிர்க்கவேண்டுமென்றும் கட்டளையிட்டான். அக்காலத்தில் இங்கிலாந்துதவிர மற்றைய நாடுகளெல்லாம் போப்பின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. ஜான் போப்புக்கு அடங்கவில்லை. என்னசொல்லியுமவன் கேளாமற்போகவே இருதிறத்தாருக்கும் போர் மூண்டது. அந்தப் போரில் ஜான் அரசனுக்கே வெற்றியுண்டாயிற்று. அறியாப்பிள்ளையான ஆர்தரும் சிறைப்பட்டான். ஜான், அச்சிறுவனை ஹூபெர்ட் என்னும் தன் ஆளிடம் ஒப்புவித்துக் கொலைசெய்யக் கட்டளையிட்டான். காராவைப்பிரிந்த கன்றெனஆர்தரும் தன் தாயைப்பிரிந்து ஆற்றமாட்டாத் துயருடன், தன் மனம் தாயையும் பிரெஞ்சு நாட்டையும் நாடி நிற்க. ஹூபெர்ட்டைப் பின்தொடர்ந்து உயிரில்லா உடம்பென இங்கிலாந்திற்கு வந்துசேர்ந்தான்.

மகனைப் பிரிந்த மாதின் துயரம் சொல்லவொண்ணாதது. முன்னிருந்த கோபம் சோகமாய் மாறியது. நமது நாட்டில் துன்ப மேலீட்டை வெளிப்படுத்தக்

குன்றையும் மான்களையும் மற்றவைகளையும், விளித்துரைப்பது வழக்கம். வாவும் இளமான்காள், கூவுங்கரிய குயில்காள் எனத் தமயந்தி அழைத்ததும், கோதாவிரியே எனச் சீதை கூவியதும் படிப்போர் மனத்திலெழும். கான்ஸ்டன்ஸின் துயரும்சினமும், மேன்மேலும் வளர்ந்து வருவதும், துயரம் சினத்தையடக்கி அவளை மாறுபடுத்துவதும், அவள், உலகத்தில் இயற்கையான புத்திர சோகத்தால் வெய்துயிர்த்து அலைந்து திரிவதும் இந்நாடகத்தில் சிறப்புடன் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தச் சமயம் அவள் பகரும் மொழிகளும் எண்ணங்களும் அவளது தன்மையை உயர்த்திக் காட்டும்.

ஜான் அரசன் அரசாண்டது பன்னிரண்டாம் நூற்றாண்டு; ஷேக்ஸ்பியர் எழுதிய காலம் 17-ஆம் நூற்றாண்டு. இதற்குள் இங்கிலாந்தில் உண்டாகிய மாறுதல்கள் பல. ஷேக்ஸ்பியரது காலத்தில் ஆங்கிலேயர் கப்பற்படையில் நிகரற்றவராயினர். பல ஊரார்களையும் கப்பல் சண்டையிற் புறங்கண்டனர். போப்பின் செல்வாக்கு அச்சமயம் அறவே ஒழிந்தது. பெரும்பாலார் அக்காலை பிராடஸ்டெண்ட் ஆய்விட்டபடியால் போப்பின் அதிகாரம் செல்லவில்லை. ஆதலால் கப்பல் சண்டையில் வெற்றிபெற்று ஏதிலரைத் தம்நாட்டில் அணுகவொட்டாது காத்த 17-ம் நூற்றாண்டின் ஆங்கிலேய அரசனைப்போல் ஜானின் பேச்சுகள் அமைந்துள்ளன. பிரெஞ்சுக்காரருக்கு உத்தரம் அளித்த போதும் போப்பின் தூதனாகிய பாண்டல்புக்கு மாறுத்தரம் தந்தபோதும், தேசாபிமானம் விளங்கும்படி சம்பாஷணைகள் எழுதப்பட்டுள்ளன. இது, சரித்திரத்துக்கு விரோதமானது. இந்நாடகத்தில் ஷேக்ஸ்பியர் தன்னிஷ்டம்போற் சரித்திரத்தை வரைந்துள்ளார். இன்னொருவனால் கெடுக்கப்பட்ட சிலைக்கல்லை கைவன்மையுள்ள ஓர்சிற்பி ஏந்தி, முற்றிலும் மாற்றி ஓர் அழகிய உருவத்தை உண்டுபண்ணுவதுபோல் சரித்திரத்தால் கெடுக்கப்பட்ட ஜான் அரசனைத் தன் கையினிற் கொண்டு ஷேக்ஸ்பியர் தன் அறிவாலும் வல்லமையாலும்வேறோர் அரசனைப்போல் நமக்குத் தீட்டிக்காட்டி இருக்கின்றார். கொலை செய்வதற்கு ஏற்றுக்கொண்ட ஹூபர்ட்டுக்கும், ஆர்தருக்கும் நடக்கும்சம்பாஷணை உலகப்பிரசித்தி பெற்றது. அரசன்ஹூபர்ட்டினிடம் தன் கருத்தை வெளியிடும் பாகமும் மிகவும் திறத்துடன் எழுதப்பட்டுள்ளது. கான்ஸ்டன்ஸினுடைய துயரம் வெளிப்படக் காட்டியுள்ள இடங்களும் கொண்டாடத் தக்கவை.

வெற்றிபெற்றவுடன் அரசன் தன்னூரிற்குப் போய்ச் சேர்ந்தான். அமைச்சரும் வேறு பிரதானிகளும் அவனிடம்வந்து ஆர்தரைச் சிறைநீக்கிவிடச் சொன்னார்கள். அரசனுடைய மாறுத்தரமாக, திரும்பி வருபவர்கள் கண்களில் ஆர்தரின்பிரேதம் தென்பட்டது. இந்தக் கொடுமை அவர்களுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதா யில்லை. அதனால் அவர்கள் அரசனை வெறுத்துப் போர்கொண்டெழுந்து வரும்படி பிலிப்பை அழைத்தார்கள். பிரெஞ்சுப்படை ஆங்கில நாட்டில் இறங்கியது. அரசன் பாண்டல்பிடம் கிரீடத்தைப் பெற்று அவனைப் பிரெஞ்சு அரசனிடம் சமாதானத்துக்கு அனுப்பினான். ரிச்சர்ட் அரசனுக்குப் பிறந்த பால்கன்ப்ரிட்ஜ் என்பவனைத் தவிர மற்றவரெல்லாம் பிரெஞ்சு அரசனைச் சேர்ந்தார்கள். இதற்குள் பால்கன்ப்ரிட்ஜ் ஒரு சேனையைத் திரட்டி அரசனைத் தெருட்டிப் போருக்கு ஆயத்தஞ் செய்தான். பிரெஞ்சு அரசனோ சமாதானத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஓரிடத்தில் நிகழ்ந்த சிறு சச்சரவில் நொறுங்குண்ட பிரதானி, உதிரம் பெருக ஓடிவந்து, பிரெஞ்சு அரசன் வெற்றி பெற்றபின் பிரதானிகளைக் கொலைசெய்யத் தீர்மானித்திருக்கும் உண்மையை வெளிப்படுத்துகிறான். ஜானுக்குப் பாதிரியொருவனால் விஷமூட்டப்படுகிறது. அமைச்சரும் பிரதானிகளும் ஜானின் மகனாகிய ஹென்றியுடன் சேர்ந்து அரசனிடம் கூடுகிறார்கள். விடமேறிய ஜானும் இறக்கிறான். இது ஷேக்ஸ்பியர் எழுதிய கதை.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும் 31—இதிகாசம்

[10-வது பக்கத் தொடர்ச்சி]

I. கந்தன் சரிதையும் அப்பர் தேவாரமும்

1. மகேந்திரம் இலங்கை கந்தமாதன வாராய்ச்சி

கந்தபுராணத்தை நாம்சற்றுக் கவனித்துப் பார்ப்போமாயின்சூரபதுமன் முன் அரசுசெய்த்இடம் கடல் கொண்ட பண்டைத் தமிழ்நாடாவது (Lost Lemuria)விளங்கும். இராமாயணத்தில் மகேந்திரம் என்பது * அநுமான் சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைக்குப்போவதற்கு முன்நின்று விஸ்வரூபம் எடுத்த மலையெனக் கூறப்பட்டுள்ளது. அம்மலை கடலோரத்தில் இருந்ததாகவும் அங்கிருந்து அநுமான் இலங்கைக்குக் கடலைத்தாவி ஆகாயமார்க்கமாய்ச் சென்றதாகவும் அறிகின்றோம். அவ்வாறு கடலைக்கடந்து அக்கரைக்குச்சென்றபோது, அவர்கண்டதைப் பின் வருமாறு வால்மீகி * கூறுகின்றார்:—

"மரங்களடர்ந்த அழகான இலங்கைத்தீவையும் மலயப் பர்வதத்தைச்சேர்ந்த காடுகளையும் கடலையும் அதன் கரையிலுள்ள சதுப்புநிலங்களையும் அங்கே வளரும் மரங்களையும் திரிகூட மலையிலிருந்து ஆறுகள் சமுத்திரத்தில் விழுமிடங்களையும் பார்த்தார்..."†

ஆயினும் இம்மகேந்தரநாடு அல்லது மகேந்திராபுரி என்பதைப்பற்றி வால்மீகி யாதும்கூறவில்லை. அக் காலத்தில் மகேந்திர மலையொன்றே தென்னிந்திய முனையில் இருந்ததென்று அறிகின்றோம். அதற்குமுன்யுகமாகிய ‡ "கிருதயுகத்தில் மலைகளுக்கு இறக்கைகள் உண்டு; அவை வாயுவேக கருடவேகத்துடன் சகல திக்குக்களிலும் அதிக வேகமர்கப் பறந்துபோகும்" என்றும் அவற்றின் சிறகுகளை இந்திரன் வெட்டிவிடவே, மைநாக பர்வதம் கடலில் ஒளித்துக்கொண்

* வால்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தாகாண்ட இறுதியிலும் சுந்தரகாண்ட முதலிலும் காண்க.

† வான்மீகமே முதல் நூல் ஆகையால், அதுவே மேற்கோளாகக் கொள்ளப்பட்டது.

‡ சுந்தரகாண்டம். ஸர்க்கம் 1. (வால்மீகி)

அவன் வசத்திலிருப்பதால் அதையும் இலக்கு வைத்துக் "கண்ணனின் னருள்" என்று அருளிச்செய்கிறார்.

குறிப்பு:—II. இதற்கு முன் பாசுரத்தில் சந்திரன் ஸூரியன் கிரகங்கள் நிலம் விசும்பு இன்னவைகளின் குணங்களும் பிரகாரங்களும் விண்ணகர் சேர்ந்த பகவானின் விபூதி யென்று அருளிச் செய்தார். அவைகளை உற்பத்தி செய்தவனும் அவனேயென்றும் அவ்வண்ணம் இவைகளைச் சிருஷ்டிக்காவிடில் தன்னோடு பிரளய காலத்தில் ஒட்டி இருந்த ஜீவாத்மாக்கள் உயர்வடைந்து உய்ந்து பாபங்கள் நிவர்த்தியாகி மேன்மேலவன் அளிக்கக்கூடிய புருஷார்த்தங்களை அடையாமல்இழந்துபோவார்கள் என்ற கருத்தினால் அவர்கள் பக்கம்கிருபைகூர்ந்து பிரளயத்திற்குப் பிறகு சிருஷ்டியைப் பகவான் நியமித்தான் என்று அவனது வலிய "கைதவத்தை"ச் சங்கல்பத்தால் இயற்றிய சிருஷ்டியைப் புகழ்ந்து பாடுகிறார்.

The good lies in giving lost souls a chance to fulfil themselves. The evolution of creation provides the chance of evolution to particular souls.

உபநிடத முனிவன்

உருவம் தீட்டும் திரு வாய்ந்த ஓவியக்காரனுக்கும் உருவும் கருத்துக்களை யிசையில் மிழற்றவல்ல கவிஞனுக்கும் பலவிதத்தில் ஒப்புமை உண்டென்பார்பலர். இதன்படி, அவ்விருவருடைய இலக்ஷியமும் ஒன்று என்றே கருதுவாராகின்றார். இயற்கைவருணனைகள் பல இலக்கியத்தில் வருவதால், சிலர், ஓவியக்காரன் வர்ணங்களை யிட்டு இரட்டுத் துணியின்மேல் பரப்புவதையே கவிஞனும் தனது செவ்விய சொற்களால் விரிக்கின்றானென்பர். எனினும் இக்கொள்கை கவிஞனுக் கோர் குறையையே புகுத்துகின்றதாகும். ஏனெனில், சொற்களை யெவ்வளவுதான் திறம்படத் தொகுத்தாலும், ஓவியக்காரன் சித்திரம் எழுதுவதுபோல் அவ்வளவு பிராத்தியக்ஷமாக மானத ஓவியம் எழுதுதல் கவிஞனுக்கு இயலாது. அப்படியாயின், கவிஞன் ஓவியக்காரனைவிடக் குறைந்தவனென்றன்றோ படும்? ஆயினும்அது உண்மையன்று.இயற்கையின் புறவியல்புகளை, ஓவியக்காரனைப்போல் அவ்வளவு பிரத்தியக்ஷமாக மானதசித்திரம் எழுதுதல் கவிஞனுக்கியலாதெனினும், ஓவியக்காரனுக்கோ மனோபாவங்களைத் தன் சித்திரங்களில் அத்துணைத் தெளிவாய் விளக்கிக் காட்ட இயலாதென்பதையும் மறத்தலாகாது. மனப்பண்புகளும், இதய லீலைகளும் கவிஞனுடைய இராச்சியமாகும். இயற்கையில் புறவியல்புகளாகிய, மனிதத் தோற்றம், கடற்காட்சி, வான்காட்சி, போர்க்காட்சி, இவைகளை ஓவியக்காரன் தீட்டினாலும், மனித நெஞ்சத்தின் நரம்புகளால் மிழற்றப்பெற்ற இனிய தீங்குரல்களையும் கருத்துக்களையும் புலவனே இசையில் செவ்விதின் இயற்றவல்லன். இதுதான் கவிஞனது முக்கிய இலக்ஷியமாகும். சுருங்கக் கூறமிடத்து, இவ்விருவருக்கும் ஒப்புமை கூறவேண்டின், மனிதனது வெளித்தோற்றத்தை முதலில் கோடுகளால் நிருமித்துப் பின் வர்ணங்களால் தீட்டும் சித்திரக்காரனைப் போல் மானுடப் பண்பினைச் செய்கைகளால் நிருமித்துச் சொற்களால் உருவும் ஒளியும்வண்ணமும்ஊட்டுபவன் பாவலன்.

இவ்வாறு ஓவியக்காரன் இயற்கையின் புறவியல்புகளை இரட்டுத்துணியில் தீட்டிக் காட்டுகின்ற முறைமையில் நிறங்களை அளவறிந்து கலந்து நமக்கு வியப்பை ஊட்டுபவனாவான். எனினும் வர்ணம் சிறிது பிழையாயிருந்தாலும், கோடுகள் சில பிழைபட்டிருந்தாலும் நமக்கு வியப்புத் தோன்றாதன்றோ? பண்பினைத் தீட்டுகின்ற கவிஞன் தன்மையும் இன்னதே. கடவுள் சிருட்டியில், ஒரு மனிதனது பண்பை ஆராய்ந்தால், அப்பண்பினில் இதுதான் முக்கிய அம்சம் என்னத் தகும் பல அம்சங்கள் கலந்திருக்கின்றன. இதனை விளக்கவேண்டி, கடவுளது சிருட்டியாற்றலைக் கையாண்ட மகா கவிகளினின்றும் உதாரணங்கள் காட்டுவேன். பாரதத்தை இங்கு எடுத்துக்கொள்வோம். கங்கை மைந்தனை வீடுமனிடம் முக்கியமாக விளங்கி நின்றது அவனது அன்னையாகிய கங்கையைப்போல் தனக்கென வாழாது உலகம் புரக்கும் உணர்ச்சியா? அல்லது அக் கங்கை தன் வெள்ளத்தால் உலகை யழிப்பதுபோல், போரில் பலரை யழிக்கும் வீரமா? அல்லது இளவயதில் செய்த சத்தியத்தைக் கடைவரையில் காத்த மனவலிமையா? எனவினவினால் இதற்கு விடைபகர்தல் எளியதன்று. எல்லாக் குணங்களும் ஒருங்கே விளங்கின்றன வென்றே கூறல்வேண்டும். கர்ணனிடம் விளங்கி நின்றது 'போர் வன்மையா, வண்மையா, இதயத்திண்மையா என்று கேட்போமாயின், மேற்கூறிய விடையே ஏற்கும். தருமனது பண்பில் சிறந்து நின்றது அறமாண்பெனின் அதுவொன்றே அமையுமோ? பாண்டவர்களைக் காட்டிலேயே காலங்கழிக்குமாறு சஞ்சயனைத் திருதராட்டிரன் அவர்களிடம் தூதுவிட்டபோது, யுதிட்டிரன் அவ்வண்ணமே செய்ய முதலில் இசையவில்லையா? இதனால் தருமன் சமரஸமே பெரிதும் விரும்பினான் என்றும் கொள்ளலாகாதோ? ஆதலின் ஒரு மனிதனது பண்பில் பல கூறுபாடுகள் ஒருங்கே விளங்கிநிற்கின்றனவென்றும், அக்கூறுபாடுகளை அளவறிந்து செறித்து, அதிர்ச்சி, பொலிவு,உலக உண்மைமுதலிய தோன்றுமாறுசெய்வதே மகாகவிகளின்கோளாகும் என்றும்முடிவுகட்டுவோம். மேற்கூறிய கோளை உட்கொண்டு இனித்துரோணன்பண்பை ஆராய்வோம். துரோணனைப்பற்றி நாம் முதலில் அறிவது அவன் யாகசேனனுக்குச் சிறுவயதில் சில வித்தைகள் கற்றுக்கொடுத்தற்காக மற்றவன் தன் இராச்சியத்தில் பாதி யளிப்பதாகக் கூறியதும், பின்னொருநாள் யாகசேனன் அரசனானபோது அவனிடம் துரோணன் பசுதானம் கேட்கச் சென்றபோதுயாகசேனன் அவனைத்துரத்தவே,மற்றவன்ஆற்றோடு அத்தினபுரிக்குச் சென்று அங்கு அருச்சுனனுக்கு வில்வித்தை கற்பித்து யாகசேனனைப் புரவிக்காலில் கட்டியிழுக்கச் செய்து, அக்காட்சியைக் கண்ட உடனே அவனுக்கு அவனரசைத் திருப்பிக்கொடுத்தானென்னும் வரலாறே யாகும். துரோணன் செய்தது சீரியதென்பாருடைய சொல் ஒருபுறமிருக்க, சிறு வயதில் ஒருவன் பிள்ளைமதியாற் கூறியதைப் பின் அவனுக்கு விரோதமாகப் பயன்படுத்துவது குற்றமென்றும் கூறலாம். பிறகு உலகு புரக்கின்ற வேந்த னொருவனைத் தன் வஞ்சினத்திற்காகத் தேர்க்காலில் கட்டியிழுத்தது நியாயமா என்றும் கேட்கலாம். மற்று, துரோ

ணன் விழைந்தது ஒரு பசுதானே, பாதியர சல்லவே என்றும் கூறலாம். அவ் வண்ணம் செய்ந்நன்றி கொன்றானுக் கோர் தண்டனையியற்றுவது குணவன்மையைக் காட்டாதோ? இவ்விஷயத்தில் ஒருதலையாகத் துணிவதற்கில்லை வறியனாயினும் கல்வியறிவுடைமையால் விளையும் சுயமதிப்பு உள்ள ஒரு அந்தணனிடம் இருக்கவல்ல குணங்களெல்லாம் அத்துரோணனிடம் இருந்தன. வெஞ்சினமெய்திக் காரியம் சாதித்ததும், பின் யாகசேனனை நலியாது விட்ட தயாளமும் சங்கப்புலவ ரொருவரை நினைப்பூட்டுகின்றது. பெருஞ்சித்திரனாரென்னும் புலவர் வெளிமானது தம்பியைப் பரிசில்கேட்ப அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப்பாடி அவன் பகடு (யானை) கொடுப்பக்கொணர்ந்து வெளிமானது கடிமரத்தில் (காவல் மரம்) பிணித்து அவனை நோக்கி,

இரவலர் புரவலை நீயு மல்லை
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்
இரவலர் உண்மையும் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே.

என்று கூறினாராம் அக்காலத்தோர் எவ்வளவு பாராட்டினும், இக்காலத்தோர் அதனைக் கவிஞனது அகம்பாவமும் வீண் சுயமதிப்புமேயாகும் என்று கருதத் தடையில்லை. தன்னை நெடுங்காலம் புறக்கணித்திருந்து பின்னொருகால் தான் நன்னிலைமை யெய்தியதும் தன்னை அளவுகடந்து புகழ்ந்த ஒரு பிரபுவுக்கு ஜான்ஸன் என்னும் ஒரு ஆங்கிலப்புலவர் குறைபாராட்டி யெழுதிய கடிதமொன்றைப்பற்றி யின்னவண்ணமே கூறுகின்றனர். ஆயினும், பெருஞ்சித்திரனார் வெளிமானிடம் இவ்வாறு அதட்டிப் பரிசில் பெற்றாலும், தன் மனைக்குச் சென்றவுடன் தனது நன் மனையாளைப் பார்த்து, அப்பொருளை

நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே.

என்று உத்தரவிட்ட தயாளத்தை யார்வியப்பது? இப்படியே ஜான்ஸன் என்பவரும் பிரபுக்களிடத்தும், வியாபாரிகளிடத்தும் அகம்பாவமாக நடந்துகொண்டாலும் அநாதையான பலருக்கு விடுதி யேற்படுத்தி அவர்களிடம் திட்டுக்கேட்டுக்கொண்டே அவர்களை ஆதரித்து வந்தாராம். புலவருடைய குணம் உலகெங்கும் ஒன்றுபோலும் அதைப் போலவே அந்தணர்க்கென்று சில பண்புவிசேடங்கள் உண்டென்று சொல்லலாம். இதனால் மனிதசுபாவம் அடிப்படையில் எங்கும் எக்காலத்தும் ஒன்றே என்னும் அறிஞர்கோளுக்கு விரோதமாக ஒன்றும் யான் மொழிகிலேன். ஆயினும் சுற்றத்தாலும் சந்தர்ப்பத்தாலும், வழக்கத்தாலும் பலப் பல பண்புவிசேடங்கள் தோற்றுகின்றமையின் முற்கால நூல்களில் அந்தணருக்கென்று சிறப்பாகக் கூறப்பட்ட குணவிசேடங்கள் துரோணனிடம் நன்கு விளங்குகின்றன வென்றும் காட்டினால், அது துரோணனது பண்பைப் புதியதோர் முறையில் ஆராய்ந்ததாகுமன்றோ?

(தொடரும்)

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[7-வது பக்கத் தொடர்ச்சி]

1. ராகம்—ஸ்வரபூஷணி.] [தாளம்—ரூபகம்.

பல்லவி

வரதராஜ நிந்நுகோரி வச்சிதி ம்ரொக்கேரா..................................(வரத)

அநுபல்லவி

ஸுருலு முனுலு பூஸுருலு சுட்டி சுட்டி ஸேவிம்சே......................(வரத)

சரணம்

வரகிரி வைகுண்டமட வர்ணிம்ப தரமுகாதட நிர்ஜருலகு தாரகலலோ
சாதிந்துடைநீவு மெரயுசுந்நாவட வர த்யாகராஜநுத கருடஸேவஜூசி......(வரத)

பொருள்

வரதராஜ - வரதராஜப் பெருமானே! நிந்நு கோரி வச்சிதி - உன்னை விரும்பி வந்தேன். ம்ரொக்கேரா - உன்னை வணங்குகிறேன்.

ஸுருலு - தேவர்களும், முனுலு - முனிவர்களும், பூஸுருலு - பிராமணர்களும், சுட்டி சுட்டி சுற்றிச் சுற்றி வந்து, ஸேவிம்சே - ஸேவிக்கும்படியான, (வரதராஜ - வரதராஜப் பெருமானே,.....வச்சிதி - வந்தேன்).

வரகிரி - சிறந்ததான உன்னுடைய ஹஸ்திகிரியானது, வைகுண்டமு அட - வைகுந்தமே என்று கூறுகின்றனர்; வர்ணிம்ப தரமு காது அட - அந்தத் திவ்விய க்ஷேத்திரத்தை வர்ணிக்கவேமுடியாதென்கின்றனர்; (அங்கு) தாரகலலோ - நக்ஷத்திரங்களிடையே, சாதீந்துடை - சரத்கால சந்திரனாக (சந்திரன் போல), நிர்ஜருலகு - தேவர்களுக்கு, நீவு மெரயுசுந்நாவு அட - நீ விளங்குகிறாய் என்கிறார்கள்; வர த்யாக ராஜநுத - சிறந்த தியாகராஜனால் கொண்டாடப்பட்டவனே! கருடஸேவ ஜூசி - உன் கருடஸேவையைத் தரிசித்து, (வச்சிதி வந்தேன்)

குறிப்பு:—ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் காஞ்சீபுரத்துக்கு விஜயம் செய்தாரென்பது பிரசித்தமானதொரு விஷயம். ஸ்வாமிகள் அக்காலத்தில வரதராஜப்பெருமானைக் குறித்து ஐந்து அல்லது ஆறு கீர்த்தனைகளும், காமாக்ஷியம்மனைக் குறித்து ஒரு கீர்த்தனமும், ஏகாம்பரேசுவரரைக் குறித்து இரண்டு கீர்த்தனங்களும் செய்தார். அவர் இவ்வூருக்கு விஜயம் செய்த அச்சமயம் லோகப்பிரசித்தமான கருடோற்சவ சமயமா யிருந்தது. அந்தக் கருடசேவையைக் குறித்து அவர் செய்த கீர்த்தனங்கள் இரண்டு. அவற்றுள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள 'வரதராஜநிந்நு'

டதென்றும், அநுமான் சென்றபோது வழியில் அவருக்கு அம்மலை அதிதிபூசை செய்ததென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

நாம் கந்தபுராணத்தை நோக்குவோமாயின், வீரவாகுதேவர் முருகக்கடவுளின் தூதராய்ச் சூரன் வசிக்கும் வீரமகேந்திராபுரிக்குச் செல்லக் கடற்கரைக்கு வந்து அங்கு உயர்ந்த சிகரம் அமைந்த கந்தமாதனத்தின்மேல் நின்று கடலைத் தாவி* இலங்கையில் முதலி லிறங்கிப் பின்னர் வீரமகேந்திரம் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவ் விலங்கை சூரபன்மன் காலத்திலும் பழைய பெரிய நகரமென மொழியப்பட்டிருப்பதால், இராவணன் காலத்திற்கு முன்னரும் அசுரர் வசிக்குமிடமாயிருந்த தென்பது விளங்குகின்றது. அது சூரபன்மன் ஊரில் வடபுறத்திய எல்லை† யென்றும் கூறப்பட்டது. அங்குத் திரிகூட மலையின் மூன்று சிகரங்களின் நடுவிலுள்ள சிகரம் இலங்கை நகரத்தின் பிரதான பாகமென்றும், அதில் வீரவாகு பாய்ந்தவுடன் இலங்கை கடலிற் படிந்ததென்றும் கூறப்பட்டது. ஆகையால் இராமாயணத்தில் மொழியப்பட்ட இலங்கையே கந்தபுராணத்திலும் மொழியப்பட்ட தெனவும், இலங்கைக்குத் தெற்கிலிருந்த வீரமகேந்திரம் முதலியபூமிகள் சூரன்காலத் திற்குப்பின்கடல்கொள்ளப்பட்ட தென்றும் அநுமானிக்கலாகும்.

வீரமகேந்திர மென்னும் மகேந்திராபுரி தேவதச்சனால், சூரபன்மனுக்கு அமைக்கப்பட்ட தெனினும், மகேந்திரநாடும், பழைய மகேந்திரமும், கடலிற்பல யோசனை தூரம் பரவியிருந்தன வென்பதும், அவற்றைச் சீர்திருத்தி விச்வகர்மா மகேந்திரா புரியும் அதைச்சுற்றி மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் அமைத்து முடித்தன னென்றும், அவ்வூருக்கு வீரமகேந்திர மென்னும் நாமம் கொடுக்கப்பட்ட தென்றும், பின்னர்

ஏமபுர மிமையபுர மிலங்கைபுர நீலபுரஞ்
சோமபுர மெனப்புகலுஞ் சுவேதபுர மவுணர்புரம்
வாமபுரம் பதுமபுர மகேந்திர புரமென்னும்
காமர்புரத் தெண்டிசைக்கும் காட்சிபெற வுதவினன்"*

என்றும் அறிகின்றோம்.

எனவே, மகேந்திர நாடானது சூரபன்மனுக்கு முன்னரே யிருந்த தமிழ்நாடு ஆகும். இந் நாட்டுமலையில் சிவபெருமான் சிவாகமங்களைத் தோற்றுவித்தருளினார் என்பது திருவாசகத்தில் கூறப்பட்டது.† சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை கூறும்போது, மணிவாசகப் பெருமான், சிவபெருமானை "மந்திர மாமலை மகேந்திர வெற்பன், அந்தமில் பெருமையாளுடை யண்ணல்" ‡ என்றும்

கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றவைம் முகங்களாற்பணித் தருளியும் §

என்றும் திருவாய்மலர்ந் தருளியது காண்க.

எனவே, மகேந்திரம் குமரிக்குத் தெற்கில் இருந்ததென்பதும், பின்னர்க் கடல்கொண்ட தமிழ்த்தேசம் இதுவே என்பதுவுந் திண்ணம். முதற் சங்கத்தார் காலத்திற்கு முன்னரே இந்திரன் அரசுரிமை¶ செலுத்திய நாடனென்பதும், இந்திர மென்னும் (ஐந்திரம்) தமிழிலக்கணம் அங்குச் செய்யப்பட்டதென்பதும், அங்கிருந்த அக்காலத் தமிழ்மக்கள் நாவலந்தீவைக் கைப்பற்றி அரசுசெய்ய வெண்ணங் கொண்டவர்களென்றும் அநுமானிக்கத்தக்க சிற்சில விஷயங்கள் கந்தபுராணத்திலும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

அநுமான் கிஷ்கிந்தையினின்று இலங்கைக்கு வந்தவழியில் கந்தமாதனம் இருந்ததாக வான்மீகி கூறாவிடினும், சுந்தரகாண்டத்தில் அசோகவனத்தையும் அதிலுள்ள உப்பரிக்கை முதலிய வனப்புக்களையும் அநுமன் கண்ணுற்றபோது, அவ்வசோகவனம் "புஷ்பிக்கும் மரங்களாலும் தேன்மணம் வீசும் மரங்களாலும், பலவகைப் பக்ஷிகளாலும், மிருகங்களாலும் அவைகளின் விசித்திர த்வனிகளாலும், வாசனைகளாலும் பரிசுத்தமான கந்தமாதன பர்வதத்தைப் போலுந்தோன்றிற்று" என வால்மீகி முனிவர் மொழிகின்றார். ஆகையால் இராவணன் காலத்தில் கந்தமாதனம் கடல்கொண்டிருக்கலா மென்றும் அது மகேந்திர பர்வதத்தின் தென்கிழக்கிலிருந்த தென்றும் நாம் அநுமானிக்கலாகும்.

* பொலங்கழல் வீரவாகு புணரிமே லிவ்வா றேகி
யலங்கலந் திண்டோள் வெஞ்சூ ரணிநகர் வடாதுபாலின்
விலங்கலில் வீரன் யாளி வியன்முகத் தவுணன் போற்றும்
இலங்கையந் தோல்லை மூதூர் அணித்தெனு மெல்லை
[சென்றான்.
கந்தபுராணம்-மகேந்திரகாண்டம்- கடல்பாய் படலம்19.

† வைப்புறு மகேந்திர வடாது புலமாகி
யிப்புற மிருந்திடு மிலங்கைதனி லேந்தல்
குப்புறுத லுங்குலை குலைந்தவுண ரோடு
முப்புறு கடற்படிதல் கண்டுவகை யுற்றான்.
ஷை இலங்கைவீழ் படலம். 3.

* கந்தபுராணம் - அசுரகாண்டம்—நகர்செய்படலம் 23.

† "மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்."
—கீர்த்தித் திருவகவல் - வரி. 10-11.

‡ ஷை வரி. 100-101. § ஷை வரி 17-20.

¶ மகேந்திரன்- Indra the great; probably one of the kings who ruled the Tamil land and who was deified subsequently, and worshipped in இந்திர விழா (Vide Silappdikaram)

அறிக்கை:—இந்த இதழைக் கண்டவுடன் 1934-ஆவது ஆண்டுச் சந்தா செலுத்தவேண்டியிருக்கிற நண்பர்கள் அனைவரும் தம் சந்தாவை மறு தபாலில் மணியார்டர் மூலமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இல்லையேல் அடுத்த இதழ் வி. பி. யில் அனுப்பப்படும். அந்தச் செலவும் சிரமமும் இல்லாமல் மணியார்டரில் அனுப்பி வைப்பவர்களுக்கு மிக்க நன்றியுடையவராக இருப்போம். மலேயா முதலிய அயல் நாடுகளுக்கு வி. பி. அனுப்புவதில்லை யாகையால் அங்குள்ளவர் சந்தாவை அனுப்பியே பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மானேஜர்.

மதுரைக் கோவை

[15-வது பக்கத் தொடர்ச்சி]

நன்னய முரைத்தல்

விள்ளா மயல்தந் திருப்பார் முகமதி
வீதிபுக்குத்
துள்ளா மறியுந் துணைக்கண்கள் போற்சொக்கர்
வெற்பினறுங்
கள்ளாசை வண்டினங் காளனங் காகமங்
கட்டுரைக்கு
முள்ளாசை வெள்ளந் தரவல்ல தோவுங்க
ளூற்பலமே. 13.

பிரிவுணர்த்தல்

வயிர்போ யிரங்கு மனமே யிவர்தந்த
வாழ்வுக்கிந்த
வுயிர்போ லுடலுமொன் ருகிலன் றேபிறை
யூற்றமிர்தத்
தயிர்போதுந் தண்டுறை யாரால வாய்நமக்
கானவின்பப்
பயிர்போல் வளர்ந்து விளைந்தனு ராகம்
பயன்படுமே. 14.

பருவர லறிதல்

கூராடல் முத்தலை வேற்சொக்க நாயகர்
கூடல்வெற்பில்
வேராட வானனம் வாடநிற் பீருமை
மேவிநமக்
கோராவி யென்றிருந் தேனிரு வேமுள்
ளளவுமினி
யீராவி யாமென வேயிங்ங னேதுன்ப
மெய்துவதே. 15.

பிரியே னென்றல்

கவளக் கடக்களிற் றூர்கடம் பாடவிக்
காவில்வளர்
பவளக் கொடிமடப் பாவைநல் லாயுன்
பயோதரமுந்
துவளத் தனிமருங் கும்பிரி வேனென் று
சோர்வதென்னே
குவளைக்கு வாசம் பிரிந்ததெங் கேபண்டு
கூறெமக்கே. 16.

அருட்குண முரைத்தல்

துறந்தவர் நெஞ்சிற் றுறவா தவர்தமிழ்ச்
சொக்கர்வெற்பில்
அறந்தரு தெய்வ மருளுநங் கேண்மை
யகலிடத்துப்
பிறந்தவ ரோதவிர்ப் பார்தவிர்ப் பாரெனிற்
[1]பின்னுமஃதே
இறந்தது வோவணங் கேயிற வாதிங்
கெழுமையுமே. 17.

பிரியிற் றனதாற்றமை யுரைத்தல்

கொல்லாது போலறங் கொல்வார் சமையக்
குறும்பறுக்குஞ்
சொல்லா ரழகிய சொக்கர்தண் சாரல்மை
தோய்ந்தகன்ற
கல்லார வாள்விழி யாலனங் காகமங்
கட்டுரைக்க
வல்லா ருறவெங்ங னேமறப் பாயென்
மடநெஞ்சமே. 18.

இடமணித்தென்றல்

வாதுந் தமிழுந் தெரிவையை நாடர்
மதுரைவண்டு
கோதும் புரிகுழற் கோமள மேபொற்
குழையிணைக்குன்
காதுங் கயல்விழி யெத்தனை போதுங்
கருதிலது
போதுந் தமிய னகர்க்குங்கள் சாரலும்
பொற்குன்றமே. 19.

பிரிந்து வருகென்றல்

செகத்தா தரிக்குந் திருவால வாயர்
சிலம்பைவிட்டுப்
புகத்தா ளெழுந்தின் று போகநிற் பீரெப்
பொழுதுமென்னெஞ்
சகத்தா மரையி லினிதிருப் பீரல்ல
காணுமிந்த
முகத்தா மரையழ கென்றொரு நாள்வந்து
முன்னிற்பதே. 20.

உயிரென வியத்தல்

காவிக் கயர்வும் வெயரா னனமுங்
கலந்தொருவர்
பாவிக் கரிய புளகித சோபையும்
பையப்பைய
மேவித் தளரு நடையுமெல் லாம்வெள்ளி
மன்றர்வெற்பில்
ஆவிக்கு முண்டுகொல் லோவிது காணு
மதிசெயமே. 21.

அருமை யுரைத்தல்

பூவிற் புகுந்த மணம்போல வும்புதுப்
பூங்கனியி
னுவிற் கினிமை புகுந்தது போலவு
ஞாலமெண்ணுந்
தேவுக் கினிய திருவால வாயர்
சிலம்பிளங்
காவிற் புகுந்திவ ரென்னகண் மாயங்
கலந்ததுவே. 22.

(பிரதி.) [1] பின்னுமத்தே.

இயற்கைப் புணர்ச்சி முற்றும்

II. இடந்தலைப் பாடு.

தலைவன் தலைவியை நினைதல்

முற்றிற் புறங்கொழித் திட்டமுத் தார
முகந்திழைத்த
சிற்றிற் புறநிற்ப ரோசெல்வ ரோவிசை
தேக்கிவண்டு
சுற்றிப் பயில்கொன்றை யார்சொக்கர் மால்வ
தோகையன்னார் [ரைத்
வெற்றிச் சிலைமத வேளையென் போல
விலையுங்கொண்டே. 23.

தலைவி தலைவனை நினைதல்

காலையிற் காவியங் கண்ணிநண் பாளர்
கடம்பவனத்
தாலையிற் பாகை யடுஞ்சொனல் லாய்விளை
யாடுமந்தண்
சோலையிற் றேடுவ ரோமது மாலை
தொடுத்தணியும்
வேலையிற் றேடுவ ரோதெரி யாதுநம்
வெற்பர்வந்தே. 24.

தந்த தெய்வந் தருமெனச் சாற்றல்

மைவந்த கண்டர் மதுரையஞ் சாரல்
மயிலனிக்கு
நைவந்து வாடுமெ னன்னெஞ்ச மேயிற்றை
நாளளவுங்
கைவந்த தெய்வந் தரவந்த காமக்
கலவியந்தத்
தெய்வந் தருமின்ன முஞ்செல்லு வோமச்
செழும்பொழிற்கே. 25.

பொழில் கண்டு மகிழ்தல்

கலத்தற் கினியவு மாய்க்கலந் தாலொரு
காலத்திலும்
புலத்தற் கரியவு மாகிய தாலன்பு
பூண்டவர்பாற்
செலத்தக்க சோதித் திருவால வாயர்
சிலம்பில்நிகர்
சொலத்தக்க தோநெஞ்ச மேவல்லி போலுமிச்
சோலையுமே. 26.

தனிநிலை காண்டல்

இரவித் தொழுங்கதி ரெங்நாள் வருமென்
றெதிர்கொண்டுதேன்
விரவித் தளையவிழ் தாமரை போல்விடங்
கொப்புளிக்கு
மரவிற் றிகழ்சடை யாரால வாயெம்மொ
டானவின்பம்
பரவித் தனிநின்ற வாதமி யேனுயிர்ப்
பாவையின்றே. 27.

மெய்தொட்டுப் பயிறல்

ஆமே முலையிணைக் கிந்தமுத் தாரமு
மல்குலுக்கும்
போமே [1]பருயம் பொறுக்கவென் றூல்மண்
புரக்கவைத்த
கோமே தகமுடி யார்சொக்க நாயகர்
கூடலிவை
தாமே தமிய னிளைப்பாறு நீழலுந்
தாழ்குழலே. 28.

(பிரதி.) [1] பருவம்.

199152

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[6-வது வால்யூம் 890-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து 3-ம் தசகம்.

1-ம் பாசுரம்

நல்குரவும்செல்வுநரகுஞ்சுவர்க்கமுமாய்
வெல்பகையுநட்பும்விடமுமமுதமுமாய்ப்
பல்வகையும்பரந்தபெருமானென்னையாள்வானைச்
செல்வமல்குகுடித்திருவிண்ணகர்கண்டேனே.

அவதாரிகை:—5-ம் பத்தில், பற்பல திவ்விய தேசங்களில் கோவில்கொண்டிருக்கும் எம்பெருமானைச் சேவித்துத் தனக்கு ஈடான கலவியைப் பெருத நிமித்தம் எம்பெருமானுக்குத் தூதுவிட்டார். அவன் வாராததின் நிமித்தம் அவன் வந்தானேனும் அவனை ஏற்போமல்லோம் என்று தன்மனதில் திருச்சங்கல்பம் செய்துகொண்டு கண்ணனைப் பிரிந்தாளொரு பிராட்டி பாசுரத்தாலே கிருஷ்ணவதாரத்தில் அவனை முனிந்து பொடிந்த பாசுரங்களால் தம் மனோநிலையைப் பற்றி அவதார பெருமாளாகிய கண்ணனுக்கு நம்ஆழ்வார் விண்ணப்பம் செய்தார். அவன் தனது ஸௌசீலியத்தைக் காட்டி ஆழ்வாரை ஒருவாறு சௌஸ்தசித்தராக ஆக்கினனுயினும் பூர்ணம் மனந்தெளிந்து தன்னைத் தனக்குரிய விசேஷ ஸம்பிரமத்திலும் தன் திவ்விய சக்தியிலும் திவ்விய ஸௌந்தரியத்திலும் ஆழ்வார் தாழ்ந்து தோய்ந்து ஸகல துக்கங்களும் தீர்ந்து உய்ந்துபோகத் திருவண்ணநகர் க்ஷேத்திரத்துக்கு அழைக்குகையாலே தம் பிரணயகோபம் தீர்ந்ததை (6-ம் பாசுரம் காண்க) இப்பத்தில் ரஸமா யநுபவிக்கின்றார். இந்நகரத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாயினும் மேற்சொன்ன ஐசுவரிய முதலியவற்றில் தோய்ந்தநுபவிக்கிறாரென்ற சங்கதி அறியத்தக்கது.

உரை:—நல்குரவும்-ஏழ்மைத்தனமும், செல்வும்-செல்வமும், நரகும்-நரகமும், சுவர்க்கமுமாய்-இனிதான ஸ்வர்க்க நாடுமாய்,(அதாவது-இவற்றின் வெவ்வேறு பிரகாரங்களும் பகவானின் பற்பல விகல்பங்களென்று தாத்பரியம். இவைபோன்ற பின் உரைக்கப்போகிற பரஸ்பர விரோத பாவங்களுக்கும் அவன் அந்தராத்மாவாயிருந்து கடவுகிறானென்று தாத்பரியம்.) வெல்-எதிரிகளை ஜெயிக்க, பகையும்-விரோதி பக்ஷமும், நட்பும் - அதற்கு எதிர்த்தட்டான சிநேகமும், விஷமும் அமுதமுமாய், பல்வகையும்-எல்லாப் பிரகாரங்களாலும், பரந்த - எங்கும் பரவியுள, பெருமான் - ஸர்வேசுவரனாகி, என்னை ஆள்வானை - என்னை இப்போது கலவைசெய்து இரக்ஷிப்பவனை, செல்வம்-ஈசுவர கலவி ஏற்பட்ட செல்வமானது, மல்கு-நிரம்பப்பெற்ற, குடி - வைணவர்கள் வாழ்கிற, திரு

விண்ணகர் - ஷெ நகரில், கண்டேனே-பசிஅதிகரித்த விடத்தே சோறு வாய்த்ததுபோல் நான் கோராமலே மனமார அநுபவிக்கும்படி கண்ணுல் கண்டேன்.

குறிப்பு I:—ஆழ்வார் பகவானேடு கலப்பேனல்லே னென்று கொண்ட பிடிவாதத்தை மாற்றி அவரைத் தன்வசப்படுத்திய பிரஸங்கத்தால் (6 - ம் பாசுரம் உரையில் காண்க.) பகவான் ஜயசீலன் சேர்க்கையில் லாப் பொருள்களில் உள்புகுந்து அவைகளே நடாத் துவதற்குரிய மற்று யாவர்க்கும் வாய்க்காத ஸாமர்த் தியமுள்ளவனென்று புகழ்பாட இடமாயிற்று.

II. இந்தத் திருவிண்ணகரம் என்ற க்ஷேத்திரம் தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்துக்குச் சமீபத்தில் திருநாகேசுவரம் என்ற க்ஷேத்திரத்துக்குப் பக்கமுள் ளது. இதிலே சிவாலயமும் விஷ்ணுஆலயமும் பக்கம். பக்கம் அமைந்து ஒருகால் வெகு விபவத்துடன் பக் தர்களே வாழ்வித்து வந்தன.

2-ம் பாசுரம்.

கண்டவின்பந்துன்பங்கலக்கங்களுந்தேற்றமுமாய்த்
தண்டமுந்தண்மையுந்தழலும்நிழலுமாய்க்
கண்டுகொள்தற்கரியபெருமானென்னேயாள்வானூர்
தெண்டிரைப்புனல்சூழ்திருவிண்ணகர்நன்னகரே.

உரை:—நாம் காண்கின்ற இன்பமும் துன்பமும் கலக்கங்களும் தெளிவும், தண்டனேயும் கருணேயும் நெருப்பும் நிழலும் எல்லாம் ஆகி, உண்மை நிலையைக் கண்டுகொள்வதற்கு அரியவனுய் அடியேனே ஆட்கொண்ட பெருமான் ஊர், தெளிந்த அலேகளேயுடைய நீர் சூழ்ந்த திருவிண்ணகர் என்னும் நல்ல நகரே.

3-ம் பாசுரம்.

நகரமும்நாடுகளும்ஞானமும்மூடமுமாய்
நிகரில்சூழ்சுடராயிருளாய்நிலனுய்விசும்பாய்ச்
சிகரமாடங்கள்சூழ்திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லேயாவர்க்கும்புண்ணிய [மே.

நகரமும் - ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வாழும் பட்டினங்களாயும் (Cities), நாடுகளும்-(Country) சிற்சில ஜநங்கள் வாழும் நாட்டுப் புறமாயும், ஞானமும் - பூர்ணஞானமாகியும், மூடமுமாய் - மௌட்டியம் அதாவது ஞானம் ஒன்றுமில்லேயாயும், நிகரில் சூழ்சுடராய் - ஒப்பில்லாத சூரிய சந்திர கிரஹநக்ஷத் திரங்கள்போல் சூழ்கின்ற பிரகாசமாயும், இருளாய்- இருளாயும், நிலனுய் - ஞானச் சுடர்போலவும் இருள் போலவும் அரூபமில்லாமல் கண்களுக்கு உருவாய்த் தோற்றும் நிலமுமாய், விசும்பாய் - ஆகாசமாய் இப் பிரகாரங்களெல்லாமாய் இவற்றிற்குக் காரணபூதனுமாய், சிகரமாடங்கள் சூழ்ந்த திருவிண்ணகரத்தில், சேர்ந்த பிரான்-கோயில்கொண்டிருக்கும் பிரபுவின், புகர்கொள் - காந்தியுள்ள, கீர்த்தி அல்லால் - யசஸு அதாவது நிரவதிக காருணியம் அல்லது, யாவர்க்கும்- எவர்களுக்கும், புண்ணியம் - முன்னரும் தற்காலத்திலும் இயற்றிய பாவங்கள் நீங்கிப் பிழைக்கும் ஜீவனோபாயம், இல்லே - வேறில்லே.

குறிப்பு:— யாவருக்கும் பாவங்களின்று விடுபட்டு நல்வழி எய்த வேறு ஜீவனேபாயம் இல்லே என்று அருளிச்செய்வது, தான்சொந்தத்தில் அநுஷ்டிக்கும் மார்க்கத்தைப் பிறர்க்குக் கற்பிக்கிறபடி.

4-ம் பாசுரம்

புண்ணியம் பாவம் புணர்ச்சி
பிரிவென் றிவையாய்
எண்ணமாய் மறப்பா யுண்மையா
யின்மையா யல்லனுய்த்
திண்ண மாடங்கள் சூழ்திரு
விண்ணகர்ச் சேர்ந்தபிரான்
கண்ணனின் னருளே கண்டுகொண்
மின்கள் கைதவமே.

புண்ணியம்-நற்செயல்-இது பின் சுகத்துக்குக் காரணம், பாவம்-தீச்செய்கை- பின் துக்கத்துக்குக் காரணம், புணர்ச்சி- மேல்கண்ட நற்செயல்களால் அடையும் தனக்கிஷ்டமான சுகபலம், பிரிவு - மேல்கண்ட தீச்செயல்களால் அனுபவிக்கவேண்டிய துக்கமான கதி - பிரியமுள்ளவர்களின் பிரிவு - இவைகள் எல்லாம் ஆகி, எண்ணமாய் - மனதில் ஞாபக உணர்ச்சியாய், மறப்பாய் - மனதில் ஸ்மரணேயில்லாமையாய், உண்மையாய் - ஸ்தூலரூபமான வஸ்துக்களாய், இன்மையாய் - அபாவமாய் - அதாவது மனேபாவமே வஸ்துவின் தத்துவரூபமாய் (abstract ideas) இந்தப் பாவாபாவங்களிலும்வஸ்துக்களிலும் உள்நின்று நடாத்தும் கடவுளாய் நின்று, அல்லனுய் - இவற்றிலுள்ள தத்துவங்களேப் பிரவேசித்து நடாத்தினனும் அவற்றின் குணகுணங்களில் யாதொருசம்பந்தமன்றிக்கே மாசற்றவனுய், திண்ணமாடங்கள்சூழ்ந்த திருவிண்ணகர் சேர்ந்தபிரான், கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய, இன்னருள் - கிருபையாகிய காருணியத்தால், கைதவம் - புண்ணிய பாப விபாக கட்டளேப்படி நடந்தேறிய சிருஷ்டிகளாக இந்த உலகத்தை, கண்டுகொள்மின்-அறிந்து கொள்ளுங்கோள்.

குறிப்பு:—கைதவம் என்பது, "கிருதகம்" என்ற ஸம்ஸ்கிருத பதத்தின் திரிபு; "செய்வினே" என்றர்த்தம்; இக் கிருதகம் அதாவது செய்யப்பட்டது இருவகை பலன் கொடுத்து அமையும்; நன்மையாய்த்தீர்ந்தால் அதைத் தூஷிப்பார் அங்கில்லே, புகழ்பாடுபவர்களுக்கு மதுபோலில்லே. "கிருதகம்" "செய்வினே" தீங்காய் முடிந்தால் "கொடுமை" என்றும் "அஸத்தியம்" என்றும் "மோசம்" என்றும் கூறுவார்கள். இந்தப்பதம் வேறு சிற்சில பதங்களின் கதியைப்போலச்சிறப்பான அர்த்தத்திலும் தீமையான அர்த்தத்திலும் பிரயோகிப்பவர் நோக்கம்போலவே பொருள் கொடுக்கும். உதாரணமாக அடுத்த பாசுரத்தில் "கைதவம்"- "உள்ளும் புறமும் ஒவ்வாத செய்கை"யைச் "செம்மை"க்கு எதிர்த்தட்டாய் உபயோகித்திருப்பதில் கண்டுகொள்க. ஆரியத்தில் "கிருத்திரமம்" என்னும் பதம் இச்சாயையைப் போர்த்துக்கொண்டு இரண்டு அர்த்தங்களில்நற்செய்கைக்கும் விபரீதத்திற்கும் உபயோகிக்கப்படலாகும். அதனே ஒருவாறு ஒத்திருக்கும் "கைதவம்" என்ற பதத்திற்கும் இந்தக் கேடு விளேந்ததோ? "கைதவம்" என்ற பதத்திற்கு, "செய்யப்பட்டது" என்ற பொருளிருப்பதை அநேகர் அறியார்; மற்றைய பொருளிலேயே இப்பதம் வழங்கி வரும்.

விசேஷக் குறிப்பு:—I. இத்தசகத்தில் பாசுரங்கள் பகவானுடைய ஸூக்ஷ்ம ஸ்வரூபத்தை விஸ்தரித்து அவனது அர்ச்சாரூப விக்ரஹத்தில் அவனது ஏகசக்தியும் அமைந்திருப்பதைக் கற்பிக்கிறது. அவ்வா

என்ற கீர்த்தனே ஒன்று. மற்றொன்று 'விநதாஸுத வாஹனுடை' என்ற கீர்த்தனே யாகும்.

ஸ்வரபூஷணி ராக லக்ஷணம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 22-வது கர்த்தா ராகமான கரஹரப்பிரியையில் ஜன்யம். ஆரோஹணத்தில் ரிஷபமும் அவரோஹணத்தில் காந்தாரமும் வர்ஜம். ஆரோஹணத்தில் சாதாரண காந்தாரத்தையும் அவரோஹணத்தில் ரிஷபத்தையும் ஊன்றிப்பாடவேண்டும். எப்போதும் பாடத் தகுந்தது.

ஆரோஹணம்:—ஸகமபதநிஸ.

அவரோஹணம்:—ஸ்நிதபமரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களேயைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களேகளேக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களேக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஜையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:--இக் கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்]

பல்லவி

; * ஸ்நி	தாபா; மா	ரீஸா	ஸநிதாநீஸா	காமா	பா--மாபாதா	தநிஸ்ா	நிதபா--மபதநி	
; * வர	தரா ; ஜ	நிந்து	கோ· · · ரி	வ ·	· —ச் ·சி · தி	ம்ரொ··	க்கே · · -ர · · ·	
ஸ்ரிஸ்நி	தாபா; மா	ரீஸா	ஸநிதாநீஸா	காமா	பா--மாபாதா	தநிஸ்ரி	ஸ்நிதப—மபதநி	
வ . ர .	தரா ; ஜ	நிந்து	கோ ... ரி	வ ·	· —ச்சி · தி	ம்ரொ ·	க்கே. .-- ர . . .	

(வரதராஜ)

அநுபல்லவி

; * ஸ் நி	தாபாமாபா	தாநீ	ஸ்ாநீஸ்ா;	க்ா;	ம்ாரீ; ஸா	ஸ்நிரிஸ்	நிதபா —மபதநி	
; * ஸுரு	லுமுனுலு	பூ ·	ஸுருலு;	சு;	ட்டிசு; ட்டி	ஸே. . .	விம் . .—சே...	

(வரதராஜ)

சரணம்

; * பப	பாபாபா;	பாதா	பாமாரீ;	ஸா;	; ;-; ;	ஸா;	கா; மாபா	
; * வர	கிரிவை;	குண்.	டமட;	. ;	; ;-; ;	வர்;	ணிம்; . ப	
; * பப	பாபாபா;	பமபத	பாமாரீ;	ஸா;	; ;-; ;	ஸா;	கா; மாபா	
; * வர	கிரிவை;	குண்..	டமட;	. ;	; ;-; ;	வர்;	ணிம்; . ப	
; * பப	பாபா—பதநித	பமபத	நிதபமரீ;	ஸா;	; ; ; ;	ஸா;	கா; மாபா	
; * வர	கிரி —வை...	குண்...	ட..ம. ட;	. ;	; ; ; ;	வர்;	ணிம்; . ப	
மா—ரீ	ஸா—ஸநிதாநீ	தா ;	நீ; ஸா;	காமா	பாபாபா;	; தா	தாதா தா;	
த—ர	மு —கா· · ·	த ;	ட; நிர் ;	ஜரு	லகுதா ;	; ர	கல லோ ;	
பாமா	ரீஸாஸா;	காமா	பா; பா;	தாதா	தா; தா ;	தாநீ	ஸ்ாநீஸ்ா ;	
சர	திந் து;	டை .	நீ ; வு ;	மொ	யு ; சுந்;	நா ·	வ · ட ;	

'வரத்யாகராஜநுத...........ஜ்ஞசி' அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—1. பம்பைப் படலம்

[13-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பரும் பம்பையுங் கலந்த தன்மையே.

உம்பர்நாயகன் எம்மையாளுடையவள்ளல், அன்னமென்னடைச் சீதையைப் விட்டுபிரிந்து பெரிது அரிதின்வருந்திய கருத்தினனுய், பிரியாத தன்துணேத் தம்பி இலக்குவனேடும்பம்பையின்கரைவந்தெய்தினன். வழிவருந்தி யுளனேனும், சீதையை அடையும்நெறி தேட விரைகின்ற சிந்தையனு யிருக்கின்ற இராமனுக்குத் தனது இளேப்பை ஆற்றிக்கொள்ள நேரமில்லே. எனினும், பெரிய காரியங்கள் இதுகாறுந் தான் பாடி முடித்தவைகளேயும் இனிப்பாட இருப்பவைகளேயும் உன்னிய கம்பர் அப்பொய்கையின் அருகு சற்றே இளேப்பாற நினேத்தவர்போல் தங்கிவிடுகின்றுர். தங்கிய புலவர் பொழுதுபோக்காக அப் பம்பைப்பொய்கையின் தோற்றத்தினேச் சிந்திப்பவராகி,

ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவ ருள்ள மொப்பது

[அறுத்த நுண்ணிய ஸ்படிகம்போலத் தெளிந்த அப்பொய்கையின் குளிர்ந்த நீரானது, விட்டுவிட்டுப் பிரகாசிக்கின்ற ஒன்பது வகை இரத்தினங்கள் சுவர்போல் குவிந்திருக்கின்ற கரையை அலேமோதி அடையுந்தோறும் அவ்வந்த இரத்தினங்களின் நிறத்தையே அடைவதாலே, ஓர்ந்துகொண்ட உணர்வு இல்லாதவர்களுடையமனத்தை ஒப்பதாயிற்று.]

எனப்பேதையர் உள்ளத்திற்குஇப்பொய்கையின்புனலில் ஓர் ஒப்புக் காண்பாராயினர். கம்பர் ஒரு முறை ஓர் உண்மையைக் கண்டுகொண்டக்கால் பின்னரெங்

கும் அக்காட்சியைக் கடக்காமல் நடக்கின்ற பண்பு வாய்ந்தன அவர் பாசுரங்கள். தனக்கெனவோர் தனி நிறமில்லா அத் தண்புனல், அன்னதே போன்ற பளிங்குபோல், தான் சார்ந்த பொருளின் நிறத்தினைத் தனதாக ஏற்றுக்கொண்டு விளங்குகின்றபான்மையை நம் கலங்கலில்காட்சிப் புலவர் காண்கின்றார். உடனே, நிறமற்ற மனிதர் சிலர் இவ்வுலகின்கண் இருப்பதுவும் அவர் நினைவிற்கு வருகின்றது. இன்னவர் தமது இயற்கை உணர்வினால் இயங்குகின்றனர். வேறு ஒன்றினைச் சாராதவரையில் அவர்தம் தன்மை மாறுவதில்லை. எனினும் வேறு ஒன்றினைச் சாரநேருமாயின் மிகவிரைவில் சார்ந்ததன் தன்மையே அவருடையதன்மையும் ஆகிவிடுகின்றது. அவர்கள் தமது உணர்வின் உண்மையை ஓர்ந்துகொண் டில்லாமையே இதற்குக் காரணமாம். மனிதரை உணர்வு அறிவு என்னும் இவை இரண்டும் இயக்குகின்றன. உணர்வு என்பது மனத்தின் இயற்கையாய தூண்டல்களாம்; கல்வி கேள்வி முதலியவைகளால் மனத்திற்கு வாய்க்கின்ற ஓர் ஆற்றலே அறிவு. இயற்கையாய உணர்வு கலையாவகை உறுதிசெய்வது அறிவின் திறம். அறிவே உணர்விற்கு ஓர் உறுதியாய நிறத்தைத் தருகின்றது என்னலாம். நல்லுணர்வு இல்லாவிடத்து அறிவினது ஆற்றல் மனிதரைத் தீமைக்கே உய்த்துச்செல்லும். மற்று, ஓர்ந்து அறியவல்ல அறிவு இல்லாவிடத்து நல்லுணர்வும் அசையாத உறுதியுடன் தன்னிலை நிற்பது அரிதாகிவிடும். தம் உள்ளத்தை இயக்குகின்ற உணர்வின் தன்மை இன்னது என்பதை ஓர்ந்துகொள்வதற்குரிய அறிவும் வாய்த்தவர்களே உறுதியுள்ளவர், நம்பத்தகுந்தவர். இன்னவாறு ஓர்ந்துகொண்ட உணர்வு இல்லாதவருடைய உள்ளம், பம்பை நீரையும் பளிங்கையும் போல் சார்ந்துழிச் சார்ந்துழி நிறத்தைச்சேர்ந்ததாகித் தீர்ந்துவிடும். உணர்வின் நன்மையும் அறிவின் திறமையும் ஒருங்கே வாய்த்த கம்பரே போன்ற மேன்மையோர் தாம்இந்த இணக்கத்தின் உண்மையைக் கண்டுரைக்க வல்லவராவர்.

கண்டதுமன்றிக் கம்பர்பெருமான் தம் பாத்திரங்களின் அமைப்பில் இவ்வுண்மையைப் பயன்படுத்திய நீர்மையும் இச்செவ்வியில் நினைவின்கண் கொள்ளற்குரியது. "இராமன் நாளை கோமுடிசூடுவான்" என்று மந்தரை கைகேசியின்பால் கூறினாள்.—

மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரன் தாதைபுக்
கேற்றவ ளிருதயத் திருக்க வேகொலாம்

என்று கைகேசியின் மன நிலையைக் கம்பர் நுனித்துரைக்கின்றனர். இதுகாறும், கைகேயியின் உள்ளத்தின் இயக்கமாகியஉணர்வும்,கோசலையின் ஆற்றலுக்கு ஆதாரமாகிய அறிவும்ஒத்திருத்தலால்; இவ்விருவரும் தன்மகன் என்றும் மாற்றாள் மகன் என்றும் யாதும் வேற்றுமை பாராட்டினார் அல்லர். கைகேசி உணர்வு மட்டுமே உடையவள்; அந் நல்லுணர்வின் உதவியால் அவள் வேற்றுமை எண்ணம் அற்றவளாக இருந்தாள் எனினும், வேற்றுமைக்கு இடந்தராத உணர்வின் தன்மை யாது என்பதும், அவ்வுணர்வு இயங்குமாறு எவ்வாறு என்பதும் ஓர்ந்து பிறகு அவ்வுணர்வினை உறுதி செய்துகொள்ளவல்ல அறிவினது ஆற்றலைக் கம்பர் அவளுக்கு அளிக்கவில்லை. அறிவினால் தெளியப்பெறாத அவள் தன் நல்லுணர்வினிடையே உண்மையைத்தலைகீழாக மயங்கி, "இராமனைப்பயந்த எனக்கு இடர் உண்டோ" என்றும், "பரதனைப் பெற்ற கோசலைக்கு அதன்மேல் என்ன வாழ்வு வருவதற்குளது" என்றும் பேசலாயினாள். இப்பிழை தங்குமளவும்,வாழி, அக்கைகேயியின் செம்மையோபிறழ்ந்ததில்லை. எனினும், ஓர்ந்துணர் வில்லவள் இவள் ஆதலின், தன்னைச் சார்ந்த அக்கூனியின் கொடிய நிறத்தை மிகவிரைவில் ஏற்றுக்கொண்டு தானும் "முனியும் முனியும் செய்கைக் கொடியாள்" ஆகிவிட்டாள். இதற்கெதிர் கோசலை தன்னிலை நின்றபெற்றி குறிக்கொள்ளத்தக்கது. இராமன் கோசலையை நண்ணிப் "பரதனே துங்கமாமுடி சூடுகின்றான்" என்ற அளவில்,

முறைமை யன்றென்ப தொன்றுண் டதல்லது
நிறைகு ணத்தவன் நின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினள் நால்வர்க்கு
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்

என்னுமிடத்துக் கம்பர் தம் கொள்கையை மீண்டும் நிறுவக் காணலாம். கைகேயி தன் உணர்விற்கு இயற்கையாயநலத்தினால் வேற்றுமை உற்றிலள், என்னின், ஆற்றல்சால்கோசலையோ தன் அறிவின் திறமையால், உணர்வின் இயக்கத்திற்கு ஆதாரமாகிநிற்பது அன்பு என்பதையும்,வேற்றுமைபோல்தோன்றுவதெல்லாம் பொய்த்தோற்றமே என்பதையும்ஓர்ந்து, வேற்றுமை என்ன விளையவல்ல நினைவுகளை மாற்றிக்கொண்ட உறுதியள் ஆயினாள். ஆயிரம் கூனிகள் இனி இவளை அசைக்கவல்லவர்கள் ஆகார்.பிறகு தன்னருமை மைந்தன் வனமே மேவவேண்டு மென்பதைக் கேட்டபின்னும், துயரமடைந்தாளேனும், யாற்றிய வேற்றுமைக்கு மாறாக யாதும் நினைத்திலள், செய்திலள். ஓர்ந்துணர் வில்லாக் கைகேயியின் உள்ளம் நீரெனச் சார்ந்தன் நிறத்தினைச் சார்ந்து தோன்றியதற்குமாறாக, ஓர்ந்துணர்வுடைய கோசலை தண்மதியெனத் தன் ஒளியையே வீசி விளங்குவாளாயினாள். பம்பைக்கரையில் இளைப்பாறிய கம்பர் பண்டைய அந்நினைவுகளை மீண்டுமிங்குக் கொணர்ந்துதருகின்றார்.

'ஓர்ந்துணர்வில்லவர் உள்ளம்' என்னும் அச்சொற்கள் கம்பரது கருத்தின் ஆழத்திலுள்ள இத்துணை அரிய பொருள்களைத் தெளிவுறக் காட்டுகின்ற செம்மைக்கும் அப் பம்பைப் பொய்கையையே சாக்ஷியாக்கச் சூழ்ந்தாரென்ன அப்பொய்கை,

எற்பொரு நாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது

[இருட்டினைக் கடிகின்ற மாணிக்கங்கள் நிறைந்த நாகர்கள் வாழ்கின்ற பாதாளலோகம் இதுதான் என்று சுட்டிக் காட்டத்தக்க ஆழமுடைய தோற்றத்தையுடையதாயிருந்தாலும், கற்பகத் தருவைப்போல் வேண்டினவர் வேண்டியதைப் பெறுவதற்குரிய காவியங்களைப் பாடியுள்ள கவிஞர் நிலைநிறுத்திய சொற்களின் பொருள்போல எவ்வளவுஆழத்திலுள்ளவைகளும் விளங்கும்படி தெளிவு வாய்ந்தது]

எனக் கம்பரே கூறிவைக்கின்றார். சான்றோர் கவியெனத் தெளிந்த கோதாவிரிக்கு இணையாக இப்பம்பையும் கவிஞர்தம் சொற்பொருளெனத் தோன்றல் சான்றதாயிற்று. அயோத்தியின் மதிலினைச் சூழ்ந்த அகழியாமெனத் தெளிவின்றிக்கிடக்கும் புன்கவிகள் போன்றதில்லை இப் பம்பைப் பொய்கையே.

பம்பைப் பொய்கையின் தெளிபுனலெனத் தன் சீரிய சொற்களால் கம்பர் மீண்டும், உணர்வின் தன்மையைச் சார்ந்த ஆழ்ந்ததோர் பொருளினை எடுத்துக் காட்டி விளக்கும் விருப்பினராகி,

காசடை விளக்கிய காட்சித் தாயினு
மாசடை பேதைமை யிடைம யக்கலால்
ஆசடை நல்லுணர் வனைய தாமெனப்
பாசடை வயின்றொறும் பரந்த பண்பது

[குற்றம் பொருந்திய அறியாமையானது இடையிடை தோன்றி மயங்கச்செய்தலாலே, இடையிடைஅற்பத்தன்மையடைகின்ற நல்லுணர்வுபோல், அப்பொய்கை, தன் ஆழத்தில்இரத்தினங்கள் இருப்பதைக்காட்டக்கூடியபடி மிகத் தெளிந்ததோற்றத்தை உடையதாயினும், இடையிடையே பச்சை இலைகள் பரவப்பெற்ற தன்மையை உடையதாயிருந்தது.]

என இயம்புகின்றனர். ஓர்ந்துகொண்டதோர் உறுதியில்லா நல்லுணர்வானது சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்வதுமல்லாமல், கல்வியினால் அகற்றப்பெறாமல் உடனுறைகின்ற அறியாமையினால் விளையும் மயக்கத்தால், அவ்வுணர்வினது நன்மை மறைக்கப்படுதலுங்கூடும் என்பது இப்பாசுரத்தினின்று அறியக்கிடக்கின்ற பொருள். பொய்கையானது அடியில் இருக்கின்ற இரத்தினங்களைக் காட்டுவது போல் நல்லுணர்வும் தனது ஆழத்தில் உயரிய எண்ணங்கள் இருப்பதை ஐயமின்றிக் காட்டுகின்றது. வேதமே திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கன்று, எனக் கைகேசி கூனியை மறுத்தது இந்நல்லுணர்வின்நீர்மையாம். எனினும் ஓர்ந்த உணர்வு இல்லாதவளாதலின், அவளது பேதைமையினின்று முளைத்துப் படர்ந்த அற்பத்தனமானது அந்நல்லுணர்வை மறைத்துவிட்டது. தயரதன் முதல்மணிப் புதல்வன் கானகம் ஏகித் தன்மகன்பரதன்நாடாள வேண்டுமென்றுபண்டைய வரங்கள் இரண்டையுங் கொண்டு வற்புறுத்துவாள் அக்கைகேயியை,

வாய்தந் தேனென் றேனினி யானோ வதுமாற்றே
னேய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ.

என்ன இன்னே யின்னே அவ் விகல்வேந்தன் பன்னியிரந்தானேனும்தன்னேரில்லா அத்தீயவள்உள்ளந்தடுமாறாமல்,

முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மன்னா யாருளர் வாய்மைக் கினி

என்று, அவன்வாய்மையறத்தையே தன்னொரு தகவிலாக்கொடுமைக்கு ஆதாரம் ஆக்கிக்கொள்வதனினும் வேறு புன்மையினைத்தலரிது. இன்னவாறெலாம், அறிவின்திறமைஎய்தா ஓர்மங்கையின்உணர்வினது இயக்கத்தைப் பம்பைப் பொய்கையின் காட்சியால் விளக்கும் இச்சூழ்ச்சி கம்பர்தம் போற்றற்கரிய புலமையின் பொருமைக்குரிய சான்றுகள் பலவற்றுள் ஒன்றாகிநிற்கின்றது.

மானுட வாழ்க்கை செம்மை எய்தச் சிந்திப்பவர், உணர்வின் நன்மையோடு அதன் புன்மையும் இன்னதென்பதை மறவாமற் காக்கவேண்டும்என்னும் கருத்தே பம்பைப் பொய்கையில் இத்துணை இரகசியங்களைக் காணும்படி கம்பரைச் செய்தது. இந்தக் காட்சியில் கம்பருக்கு உதவியாய் நின்றவர் திருவள்ளுவர். இப்பெருந்தகை, மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

எனக் கூறிய குறள், கம்பரது பம்பைப் பொய்கையில் இனிது கரைக்கப்பெற்றிருக்கின்றதென்பதற்கு ஐயம் இல்லை. உள்ளத்தில் உள்ளதை ஓர்ந்து உணர்தல் வேண்டும் என வற்புறுத்துகின்றார் வள்ளுவர். அப்படி, 'ஓர்ந்துணர்வில்லவர் உள்ளம்' என்னவாகிவிடும் என்பதைக் கம்பர்பாசுரம் எடுத்து விளக்குகின்றது. சொற்களின் அமைப்பாலும் பொருளின் நுட்பத்தாலும் இவ் விருபெரும் புலவர்களும் உணர்வினது தன்மையை உரைப்பதில் உண்மையுற ஒத்திருக்கின்றனர். எனின், 'ஓர்ந்தும் உணர்வில்லவர்" என உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் இங்குத் தொக்கதென்றுகொண்டு, 'நூல்களைக் கற்றும் அவைகளின்பொருளை அறியாயதவர்' எனப் பொருள்காண்பது, இப்புலவர்தம் கருத்திற்கும் உணர்வின் உண்மைத்தன்மைக்கும் மாறாகி முடியுமென ஐயுறவெய்த இடமுளது. கல்வியால் தோராத உணர்வின் தன்மையையே வள்ளுவரோடு கம்பர்பெருமான் இங்குக் கூறுகின்றார். கற்றும் அதன் பயனை உணராதார் புன்மை,

நற்பெருங் கல்விச் செல்வ
நவையறு துறையை நண்ணி
முற்பய னுணர்ந்த தூயோர்
மொழியொடு பழகி முற்றி
பிற்பய னுணர்த றேற்றாப்
பேதைபோல் வஞ்சன் செய்த
கற்பனை யென்ன வோடிக்
கலந்தது கள்ளின் வேகம்

எனப் பின்னர் இந்தரசித்தன் ஏவிய பிரம்மாதிரத்தால் தன்பகை தொலைந்ததென்ன எண்ணி மகிழ்ந்த இராவணன் அவ்வெற்றியைக் கொண்டாடும்வண்ணம் கண்டவொரு களியாட்டின்கண் நடனசாலையில் அரம்பையர்க் கூட்டிய கள்ளின் வேகத்துடன் கலந்துரைக்க நிற்கின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. G. மெடிகேடட் டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராசா சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோகத்சிற்றாமணக்கு எண்ணெ. காஸ்டராலைன்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199152

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

கலா நிலயக் கல்விக் கழகம்.

இக் கழகத்தின் அடுத்த வகுப்பு கானாடுகாத்தானில் ஏப்ரல் மாதம் 15, 16-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை.)

அவ்விரு தினங்களிலும் மாலை 6 மணிக்குக் காரைக்குடியில், S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B.A., B.L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

பூனைக்கு வாரிசு:—இங்கிலாந்தில் உள்ள டோல்டன்கேட்டில் கொழுத்த கரும்பூனை ஒன்று சுகமாய்க் காலத்தைக் கழித்துவருகிறது. அது வருஷத்திற்கு 36 பவுன் வருமானத்தைப் பெற்று வாழ்க்கையை சந்தோஷகரமாய் நடத்துகிறது. சமீபத்தில் 73 வது வயதில் காலஞ்சென்ற அதன் எஜமானி மிஸ். ஜேன் பார்வைஸ், 1200-பவுன் கொண்ட தன்னுடைய முழுச் சொத்தையும் டிரஸ்டு ஏற்பாட்டின் பேரில் அப்பூனைக்கு விட்டுச் சென்றிருக்கிறார். பூனைக்குப் பிற்காலத்தில் மிஸ். பார்வைஸின் 15 உறவினர்களுக்கு அப் பணம் பாகத்துக் குரியதாகும். பூனைக்கு வயது ஐந்து தான் ஆகிறது. திடமாக இருக்கிறது. குறைந்தபக்ஷம் அது இன்னும் பதினைந்து வருஷகாலம் ஜீவித்திருக்கும். மிஸ். பார்வைஸின் சுற்றத்தார்கள் அனைவருக்கும் அறுபது வயதுக்குமேலாகிறது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

வெஸ்ட் மின்ஸ்டர் மாதா கோயில் பேய்:—வெஸ்ட் மின்ஸ்டர் மாதா கோவிலில் சில நாட்களாகப் பிசாசு நடமாடுவதாக எங்கும் ஒரே பேச்சாக விருக்கிறது. அந்தப் பைசாசம் இரண்டு வருஷங்களாகக் காணப்படாமல் இருந்து இப்பொழுது மீண்டும் தோன்றி இருப்பதாகத் தெரிகின்றது. அதன் தோற்றம் நெட்டையாகவும் மிக மெலிந்தும் சந்நியாசியின் தலைமூடி அணிந்தும் காணப்படுகிறது. அது 8-வது ஹென்றி அரசர் காலத்தில் கொலைசெய்யப்பட்ட சந்நியாசி ஒருவருடைய ஆவி என்று கருதப்படுகிறது.

இந்தப் பிசாசு மாலை 5 மணி முதல் நடுஇரவு வரை மடத்தின் கட்டிடங்களுக்கிடையில் உலாவுகின்றதென்றும், திடீரென்று யாதொரு சப்தமுமின்றி மறைந்துவிடுகின்றதென்றும், தரைமட்டத்திற்கு 2 அங்குலத்துக்கு மேல் நடக்கின்றதாகவும் அதைப் பார்ப்பதற்கு மிகப்பயங்கரமா யிருக்கின்றதென்றும் கோவில் அதிகாரிகள் உரைக்கின்றனர். இரண்டு அமெரிக்க யாத்திரிகள், தாங்கள் அப் பைசாசத்தை நேரில் சந்தித்துப் பேசியதாகவும், அதனுடைய வாய்மொழிப்பிரகாரம் அதனின் கடைசிக் கதியைக்கேட்டறிந்ததாகவும் கூறுகிறார்கள்.

* * *

அன்னியனைப் புருஷனென்ற அரிவை:—அமெரிக்காவில் வான்கூவர் நகரத் தெருவில் மிஸஸ் மேரி லேட்டர் என்னும் பெண் - தன்னை 5 வருஷங்களுக்கு முன் விட்டு மறைந்துபோன தன் கணவனைப் போல் அங்க அடையாளம் நடை உடை பாவனை கொண்ட வேற்று மனிதன் ஒருவனைத் தன் புருஷன் என நினைத்து அவர் அருகிற் சென்று பேசினாள். அச்சமயம் அவளுடைய இரண்டு பிள்ளைகளும் தங்களுடைய தகப்பனென்று நினைத்து "அப்பா" என்று கூப்பிட்டனர். அம்மனிதன், விழிக்க விழிக்கப் பார்த்தான். அதன்மேல் அவனைக்கோர்ட்டுக் கிழுத்துக்கொண்டு போய் நீதிபதி முன், "இம்மனிதனுடைய கண்களும் தலைமயிரும், அங்க அடையாளங்களும் நிறமும் என் புருஷனுடையது மாதிரியே அமைந்திருக்கின்றன. நடை கூட அதேமாதிரி யிருக்கின்றது. ஆதலால் இவரே என்னுடைய புருஷன்" என்று மனுச்செய்து கொண்டாள். ஆனால் ரயில்வே உத்தியோகஸ்தர்கள், அம்மனிதன் வான்கூவரின் 1918—ம் வருஷம் தொட்டங்கித் தங்களிடம் வேலைசெய்து வருவதாகவும், லேட்டர் தம்பதிகள் வேறு இடத்தில் வசித்துவந்ததாகவும் தெரிவித்தார்கள். அதன்மேல் நீதிபதி இவ்வழக்கைத் தள்ளிவிட்டார். கடைசியாக அப்பெண், தன்னுடைய புருஷனின் வலதுபுஜத்தில் ஒரு தழும்பு உண்டென்று உரைத்தாள். உடனே அம்மனிதன் தன் கைஉறையை நீக்கிக் காட்டத் தழும்பொன்றுமில்லை.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, ...

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., ...